# 10 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு: மக்கள் வங்கி புதிய திட்டம்


தீபாவளி
விசேஷ விற்பனை
உங்கள்
ஜவுளி தேவைகளை
பூர்த்தி செய்ய
விஜயஞ் செய்யுங்கள்
நணேசானந்தாஸ்
( முட்டாசுக்கடை சந்தி )
208, கே.கே எஸ்.ரேட், யாழ்ப்பாணம்.



Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily
தபால்பெட்டி எண் : 49
போன் : 389
மலர் 12
இதழ் 251
தேசிய தினசரி
யாழ்ப்பாணம் ஐப்பசி 3 ஷஃபான் 18 செவ்வாய்க்கிழமை (20-10-70)



எமது தீபாவளி
மலிவு விற்பனை
15 முதல் 28 வரை
தீபாவளி பண்டிகையை
சிறப்புடன் கொண்டாட
தரமான ஜவுளிகளைத்
தெரிவு செய்ய
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.


கொழும்பு, திங்கள் மக்கள் வங்கி 430 புதிய கிளைகளை பல்வேறிடங்களி லும் திறக்கத் தீர்மானித் துள்ளது. பட்டதாரிகள் உட்பட பலருக்கு இதனுல் வேலைவாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது தற்போது 93 மக்கள் வங் கிக் கிளைகள் உள்ளன. புதிய வங்கிகிளைகளை கிராமப்புறங் களில் அமைக்க நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர்.

பிரதம மந்திரி அண்மை யில் அறிவித்த தொழில் வாய்ப்புகளைப் பெருக்கும் திட்டத்துக்கு இந்த நட வடிக்கை வலுவூட்டுவதாக இருக்கும்.

மக்கள் வங்கி ஆரம்பிக்க விருக்கும் இப்புதிய கிளை களின் மூலம் சுமார் ஓர் ஆயி ரம் பட்டதாரிகள் உட்பட பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படு கின்றது. (சிபிஏ)

## இரு கடற்படை அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம்

கொழும்பு, திங்கள் இலங்கைக் கடற்படை யைச் சேர்ந்த இரண்டு அதி காரிகள் இன்று தற்காலிக மாக வேலைநீக்கம் செய்யப் பட்டனர். கவர்னர் ஜென ரலின் உத்தரவின்மீது இவர் கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

1966ம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் திகதி தமிழ்மொழிச் சட்ட விதிகள் கொண்டுவரப்பட்ட போது அதை எதிர்த்து நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு அப்போதைய எதிர்க்கட் சித் தலைவரான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமை தாங்கியதைத் தொடர்ந்து அன்று இலங் கைக் கடற்படையைச் சேர் ந்த சிலர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவை அவ மதித்ததாகவும், மிரட்டிய தாகவும் கூறப்பட்ட புகார் பற்றிப் பூர்வாங்க விசா ரணைசெய்த ரேயல் கமி ஷன் தெரிவித்த முடிவுகளைத் தொடர்ந்தே இரண்டு அதி காரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள னர்.

1966ம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி கடற்படை அதிகாரிகள் சிலர் திருமதி பண்டாரநாயக்காவை மிரட் டிய சமயத்தில் அப்போது படைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் உடுகம வின் உத்தரவின் மீது சென்ற துருப்புகள் அவ ரைக் காப்பாற்றியதாகக் கூறப்பட்டது. அச்சமயத் தில் திருமதி பண்டாரநா யக்கா செய்த புகார்மீது அன்றைய அரசாங்கம் நட வடிக்கை எடுக்கத் தவறிய துடன் ரிச்சார்ட் உடுகமை யைக் கண்டித்ததாகவும் சொல்லப்பட்டது. (சிபிஏ)

### காயம்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாத்திரீகர்கள் சென்ற வாகனமொன்றினுல் மோத ப்பட்ட மாணவன் ஒருவன் உடனடியாக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக் கப்பட்டார். (குவிம)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமந்தோறும் குழுக்கள்

## புதிய அபிவிருத்தி திட்டம் அரசாங்க அதிபர் தகவல்

— பாமா ராஜகோபால் —

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாண மாவட்டத் தில் அபிவிருத்தி வேலைகளுக் காக கிராமங்கள் தோறும் அபிவிருத்திக் குழுக்கள் நிய மிக்கப்படவிருக்கின்றன. காரி யாதிகாரி தலைமையில் இயங்க விருக்கும் இக்குழுக்களில் கிராமசபைத் தலைவர்கள் அங் கம் வகிப்பார்கள்.

யாழ் மாவட்ட அரசாங்க அதி பர் திரு. விமல் அமர சேகரா மேற்கண்ட தகவலை என்னிடம் தெரிவித்தார்.

கண்டி, கொழும்பு, குரு நாகலை, அம்பாந்தோட்டை யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்கள் அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கத் தினுல் தெரிவு செய்யப்பட் டுள்ளதாகவும் அவர் மேலும்

### இயங்கும்முறை

'ஒவ்வொரு கிராம சபை கள் உட்பட்ட பிரதேசங்க ளில் கிராம அபிவிருத்திக் குழுக்கள் நியமிக்கப்படும் அந்தக் குழுக்களுக்கு அப் பகுதி காரியாதிகாரி தலைவ ராக இருப்பார். அப்பகுதி கிராமசபைத்தலைவர், பல நோக்குக் கூட்டுறவு சங் கத்தலைவர், கமத்தொழில் உத்தியோகத்தர் மற்றும் பொதுஸ்தாபனங்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் கள் இக்குழுவில் அங்கத்த வர்களாகச் சேர்க்கப் படு வார்கள்' என்று கூறிய அர சாங்க அதிபர் அக்குழுக்க ளின் வேலைகள் பற்றிக் கூறி யதாவது:-

### இக்குழுவே தீர்மானிக்கும் நாளை மாநாடு

இந்த அபிவிருத்திக்குழுக் கள் நியமிப்பது சம்பந்த மாக நாளை யாழ். மாவட்ட காரியாதிகாரிகள் கொண்ட மகாநாடொன்றைக் கூட்ட விருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டம் புறக்கணிக்கப்படுவதாக சொல்லப்படுவதில் எவ்வித உண்மையுமே கிடையாது என்று நான் கேட்டகேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கை யில் அரசாங்க அதிபர் கூறி னுர்.

[illegible] அபிவிருத் [illegible] வேலைகளுக்காக மக்கள் அரசு யாழ்ப்பா[illegible]

## நெசவாளர் குடியேற்றத் திட்டம் அவசியம்

யாழ்ப்பாணம், செவ். "கைத்தறிச்சேலை வேட்டி களுக்கு நிறைய கிராக்கி ஏற்பட்டுள்ளது. தீபாவ ளியை முன்னிட்டு நாம் போதிய முயற்சி மேற் கொண்டும் நூல் பெறுவ தில் கஷ்டம் ஏற்பட்டுள் ளது'

இவ்வாறு சாவகச்சேரி டச்சு வீதி நெசவு நிலையத் தின் முகாமையாளர் திரு. எஸ். நவரத்தினம் மேற் கண்டவாறு கூறினுர்.

தொடர்ந்து அவர் பேசிய தாவது: வெளியூர் துணிகள் எமது நாட்டுக்கு ஒவ்வாத வகையாகவுள்ளது.

சுவத்தியத்திற்கு ஏற்ற தாகவும், சிக்கனப் புட வைத் தினிசுகளாகவும் நெய்து மக்களை அணியச் செய்வதே நெசவாளர் சேவையாகும். பருத்திப் [illegible] விட்டால் எமது நெசவுத் தறிகள் ஒருகாலம் விறகுக ளாகவே மாறிவிடும். சுவா த்திய வளமான இடங்க ளைத் தெரிந்து பருத்திப் பயிர் உற்பத்தி செய்ய வேண்டும். அண்மையில் துணுக்காய், மல்லாவி, வவ னிக்குளம், அக்கராயன் போன்ற இடங்களில் பரீ ட்ச்சார்த முறையில் பயிரி டப் பட்ட பருத்திப்பயிர் பலன் அளித்தமை மகிழ்ச் சியாகும்.

இந்த நாட்டின்சுய தேவை பற்றி அக்கறை காட்டும் அரசாங்கம் உடன் பருத் திப் பயிர் நாட்ட ஓர் நெச வாளர் குடியேற்றதிட்டமே அவசியம் உருவாக்க வேண் டும். இதை நா[illegible] வடமா காண அரசாங்க அதிபர் மூலம் நடவடிக்கை எடுக் கவும் வேண்டியுள்ளோம்

## இன்று பரீட்சை

யாழ்ப்பாணம், செவ் பொலிஸ் கான்ஸ்டபிள் வேலைக்கு மனுச்செய்த பெண்களுக்கு இன்று வட பகுதிப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவிருக் கிறது.

— —

## தபால் அமைச்சரிடம் கோரிக்கை

ஊரதீவு, திங்கள் தீவுப்பகுதியில் நிரந்தர மற்ற உபதபாலதிபர்களு டன் இயங்கும் உபதபால் நிலையங்களுக்கு நிரந்தர மான உபதபாலதிபர்களை நியமித்துத் தரும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளையினர் தபால்தந்தி மந் திரி திரு செ. குமாரசூரிய ரைக் கேட்டுள்ளனர்.

# வடக்கில் விபத்து அதிகம் இ. போ. சபைக்கு பங்கு கூட!

யாழ்ப்பாணம், செவ் இந்த வருடம் செப்டம் பர் மாதத்துடன் முடிவ டைந்த ஒன்பது மாதங்க ளில் வடமாகாணத்தில் 512 விபத்துச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 34 விபத்துக்கள் உயிர்ப்பலி யெடுத்துள்ளன.

[illegible] கைப் போக்குவரத்துச்சபை வாகனங்களினுலும் 16விபத் துக்கள் வாடகைக் கார்களி னுலும் ஏற்பட்டிருக்கின் றன

யாழ்ப்பாணத்தில் 106 விபத்துக்களும் சுன்னுகத் தில் 44 விபத்துக்களும்காங் கேசன்துறையில் 28 விபத் [illegible] யில் 47 விபத்துக்களும் சம் பவித்திருக்கின்றன.

காங்கேசன்துறை வீதி பருத்தித்துறைவீதி கண்டி வீதி ஆகிய இடங்கள்தான் விபத்துக்கள் அதிகமாக நடந்துள்ள இடங்களாகும்.

தரையில்தவிர கடலில் நடந்த பெருவிபத்து பாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

...யாகவுள்ளது.

சுவத்தியத்திற்கு ஏற்றதாகவும், சிக்கனப் புடவைத் தினிசுகளாகவும் நெய்து மக்களை அணியச் செய்வதே நெசவாளர் சேவையாகும். பருத்திப் பயிர் இந்த நாட்டில் நாமே உற்பத்தி செய்யாதிப் பயிர் நாட்ட ஓர் நெசவாளர் குடியேற்றதிட்டமே அவசியம் உருவாக்க வேண்டும். இதை நா வடமாகாண அரசாங்க அதிபர் மூலம் நடவடிக்கை எடுக்கவும் வேண்டியுள்ளோம்

(கு.வி.ம)

என்னிடம் தெரிவித்தார்.

கண்டி, கொழும்பு, குருநாகலை, அம்பாந்தோட்டை யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்கள் அபிவிருத்தி வேலைகளுக்காக அரசாங்கத்தினுல் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திட்ட அபிவிருத்திஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி இரு தினங்களுக்கு முன்னர் கூட்டிய மகாநாட்டில் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர். யாழ் மாவட்ட அரசங்க அதிபர் திரு.விமல் அமரசேகரா யாழ் மாவட்டத்தில் மேற் கொள்ள படவிருக்கும் அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமாக என்னிடம் விளக்கமாகக்கூறினுர்.

சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் இக்குழுவில் அங்கத்தவர்களாகச் சேர்க்கப் படுவார்கள்' என்று கூறிய அரசாங்க அதிபர் அக்குழுக்களின் வேலைகள் பற்றிக் கூறியதாவது:-

கிராமத்தை அபிவிருத்தி செய்வதும், அக்கிராமத்திலுள்ள வாலிபர்களுக்கு வேலைகொடுத்து வேலையில்லாப்பிரச்னையை ஒழிப்பதுமே அரசாங்கத்தின் திட்டமாகும். இந்த அபிவிருத்திக் குழுக்கள் கூடி ஆலோசனை செய்து அப்பகுதியில் எப்படியான கைத்தொழில் நிலையங்களை ஆரம்பிக்காலமென முடிவு செய்யும் அரசாங்கம் அதற்கான சகல உதவிகளையும் வழங்கும். இதன்மூலம் கிராமம் அபிவிருத்தி அடைந்து பொருளாதார நிறைவு கொள்வதுடன், வேலையில்லாப்பிரச்னையும் தீர வழி வகுக்கும், அத்துடன் கிராமத்தில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தி வேலைகளையும்

என்று நான் கேட்டகேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் அரசாங்க அதிபர் கூறினுர்.

''அப்படியானுல்அபிவிருத்தித் திட்டவேலைகளுக்காக மக்கள் அரசு யாழ்ப்பாண மாவட்டத்தையும் தெரிவு செய்திருக்கமாட்டாதே;'' என்ருர்.

### பொதுமக்களும் அரச ஊழியரும்

''பொதுமக்களுடன் அரசாங்கஊழியர்கள் இணைந்து, நெருக்கமாக, பரஸ்பரமாகப்பணியாற்றக் கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்பதே என் அவா அரசாங்க ஊழியர்கள் இதனை உணர்ந்துமக்கள் சேவகர்கள் என்பதை மனத்தில் மறக்காது கொண்டு செயலாற்ற வேண்டும். அப்போதுதான் நாடும் நகரமும் செழிப்புற்று வாழமுடியும் என்றும் திரு. விமல் அமரசேகரா கூறினுர்.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்த வருடம் செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களில் வடமாகாணத்தில் 512 விபத்துச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில் 34 விபத்துக்கள் உயிர்ப்பலியெடுத்துள்ளன,

இந்த விபத்துக்களில் ஐம்பது விபத்துக்கள் இலங்...

...வாகனங்களினுலும் 16விபத்துக்கள் வாடகைக் கார்களினுலும் ஏற்பட்டிருக்கின்றன

யாழ்ப்பாணத்தில் 106 விபத்துக்களும் சுன்னுகத்தில் 44 விபத்துக்களும்காங்கேசன்துறையில் 28 விபத்துக்களும் வவனியாவில் 90 விபத்துக்களும் கிளிநொச்சியில் 47 விபத்துக்களும் சம்பவித்திருக்கின்றன,

காங்கேசன்துறை வீதி பருத்தித்துறைவீதி கண்டி வீதி ஆகிய இடங்கள்தான் விபத்துக்கள் அதிகமாக நடந்துள்ள இடங்களாகும்,

தரையில்தவிர கடலில் நடந்த பெருவிபத்து பாலைதீவுச் சம்பவமாகும், இந்த விபத்தில் 52பேர் மாண்டனர். இதுதவிர மயிலிட்டிக் கடலிலும் ஒருவர் விபத்தில் மாண்டார்.

# கலை என்பது என்ன?

## வித்தியாதரிசி விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்.

''கலை என்பது அழகு உணர்வு மேலீட்டால் எழுகின்ற அழகிய பொருள் படைத்தலும் செயற்கைப் பொருள் படைத்தலுமாகிய இயற்கைத் தன்மையை வெளிப்படுத்துவது. அழகுணர்ச்சியாகிய ரசஞானம் கண்வழிச் செல்லல், செவி முதலாய ஏனைய புலன்வழிச்செல்லல் என இருவகைப்படும். கண்வழிச் செல்லலின் அடங்குபவையே சிற்பம், நடனம், ஓவியம் ஆகிய கலைகளாகும்''

கொழும்புத்துறை அரசினர் ஆசிரியகலாசாலையில் சென்ற சனிக்கிழமை ''இலங்கையில் கலை வளர்ச்சி என்னும் பொருள் பற்றி உரையாற்றிய சித்திர வித்தியாதரிசி கலாகேசரி திரு. தம்பித்துரை மேற்கண்டவாறு கூறினுர்.

கலாசாலை அதிபர் வி எஸ். விசுவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையின் பண்டைய பௌத்த தேவாலயங்களிலும் சிவ தேவாலயங்களிலும் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும், இந்திய சிற்ப ஓவியங்களையே ஒத்திருக்கின்றன என்றும் பௌத்த சமய வருகையால் ஈழத்து கலைவளர்ச்சி மாற்றம் பெற்று சிறப்புநிலை எய்தியதெனவும் சிகிரியா, ருவான்வெல ஓவியங்கள் மிகவும் நுட்பமான கலையம்சம் நிறைந்த எழில் பொருந்தியவை எனவும் குறிப்பிட்டார்.

ஈழத்தின் சிற்ப ஓவிய வளர்ச்சிபற்றி அறிய முற்படுவோர் முதலில் கீழைத்தேய, மேலைத்தேய கலை வளர்ச்சியை நன்கறிந்திருக்க வேண்டுமென அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

கலாசாலை சித்திர விரிவுரையாளர் திரு. ஏ, இராசையா நன்றி கூறினுர்.

# யாழ். தேர்தல் ஆட்சேபமனு நவம்பர் 7-ம்தேதி விசாரணை

யாழ்ப்பாணம், செவ்,

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேப மனு நவம்பர் மாதம் 7-ம் திகதி யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் விசாரணை செய்யப்படும்.

நீதியரசர் பண்டித குணவர்த்தன முன்னிலையில் இவ் விசாரணை நடைபெறவிருப்பதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினராக திரு. திரு. சி. எக்ஸ் மார்ட்டின் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து இம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை தேர்தல் ஆட்சேப மனு டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்தில் விசாரணை செய்யப்படவிருக்கிறது. பருத்தித்துறை தேர்தல் ஆட்சேபமனு கொழும்பில் விசாரணை செய்யப்படவிருக்கிறது.

### உதவி அமைச்சருக்கு ஆசிரிய சங்கங்கள் வரவேற்பு

யாழ்ப்பாணம் செவ்

நாளை யாழ்ப்பாணத்துக்கு வருகைதரும் உதவிக்கல்வி மைச்சருக்கு வடபகுதியைச் சேர்ந்த எட்டு ஆசிரியர்கள் சங்கங்கள் வரவேற்பளிக்கவிருக்கின்றன

திரு எம்.ஏ. கந்தையா தலைமையில் நடைபெறும் வரவேற்புக் கூட்டத்தில் வடபிரதேச வித்யாதிபதி வி. சங்கரலிங்கம் திரு. எல் ஆரியவன்ச திரு. ஏ வைத்திலிங்கம் திரு, எஸ், சத்திரபால ஆகியோர் உரையாற்றுவர்.

......

# "கல்வியின் நோக்கம் நல்லபிரஜைகளை உருவாக்குவதாக இருக்கவேண்டும்"

## பரிசளிப்பு விழாவில் நீதியரசர் வின்செென்ற் தாமோதரம்

யாழ்ப்பாணம், செவ்

''கல்வியின் அடிப்படை நோக்கம் பணம் சேர்ப்பதாகவும், சமுதாயத்தில் பாதுகாப்பை ஏற்படுத்துவதாகவும் இருக்கக் கூடாது; நாட்டுக்கு நல்ல ஒழுக்கமுள்ள பிரஜைகளை உருவாக்குவதாகக் கல்வியின் நோக்கம் இருக்கவேண்டும்.''

இவ்வாறு நேற்றிரவு நடந்த யாழ். மத்திய கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நீதியரசர் வின்சன்ற் தாமோதரம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திரு. ஈ சபாலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் நீதியரசர் வின்சன்ற் தாமோதரம் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''பணம் சேர்க்க வேண்டும், சமுதாயத்தில் பாதுகாப்பு வேண்டுமென்ற ஆரம்ப நோக்கமே தவருன தாக அடிமனதில் பதிந்துவிடுவதால் அம்மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்றதும் ஒழுக்கமற்றவர்களாக மாறிவிடுகிருர்கள். பல்கலைக்கழகம் சென்றதும், தமது பணம் சேர்க்கவேண்டும் என்ற நோக்கம் நிறைவேருதென்பதை அவர்கள் உணர்கிருர்கள். இதனுல் புரட்சி புரட்சிஎன்று கூறிக்கொண்டு ஒழுக்கமின்மைக்கு வித்திடுகிருர்கள்.

அரசாங்கம் ஒவ்வொரு மனிதனுக்கும் சாதிசமயமில்லாத முறையில் பாதுகாப்பும், பொருளாதார வசதியையும் வழங்கவேண்டும். ஆனுல் இவையிரண்டையும் நோக்கமாகக் கொண்டுதான் கல்வியைப் போதிக்கக்கூடாது. அப்படிப் போதித்தால் நல்ல பிரஜைகளை உருவாக்கமுடியாது அப்படி உருவாகும் பிரஜைகள் எதையுமே சமுதாயத்திற்குக் கொடுக்கமாட்டார்கள். இவர்கள் சமுதாயத்திலிருந்து தமக்கு எதையாவது வறுகித்தான்கொள்வார்கள்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி புகட்டப்பட வேண்டுமென்று சொல்கிருேம். இந்தக் கல்வி அறிவுக்காக என்று கூறுகிருேம். ஆனுல் உண்மையாகக் கல்வியின் நோக்கம் நல்ல பிரஜைகளை உருவாககுவதாக அமையவேண்டும்

சென்றல் தோமஸ் போன்ற கல்லூரிகளில் கல்வியுடன் சமயத்தையும் இரண்டறக் கலந்து கற்பிப்பதால் இங்குள்ள மாணவர்கள் தாமே ஒழுக்கமுள்ளவர்களாகத் திகழக்கூடியவர்களாகஇருக்கிருர்கள்.

மாணவர்கள் கஷ்டத்தையும் போராட்டத்தையும் தாங்கிக்கொள்ளவேண்டும். இதற்கான கோட்டையொன்றைக் கட்டிக் கொள்ள வேண்டும் ஆனுல் அத்தக் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்ளக் கூடாது

வாழ்க்கையில் எந்தச்சவாலையும் மாணவர்கள்ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

பரிசு வாங்காத மாணவர்கள் பரிசு வாங்கவில்லையே என்று கவலைப்படத் தேவை இல்லை. நான்படிக்கும்போது முதல் மூன்றுக்குள் வந்தது கிடையாது கடைசி மூன்றுக்குள் வந்தது நினைவிருக்கிறது. வாழ்க்கை 100 யார் ஓட்டமல்ல அதுஒரு மரதன் ஓட்டம் அந்த மரதன் ஓட்டத்தை ஓடி முடிப்பதற்கு துணிவும் மனப்பலமும் தேவை அவைகள் இருந்தால் வாழ்க்கை ஓட்டத்தில் வெற்றிபெறலாம்.

### வீரர்களின் அஸ்திக்கா மாணவர் பயணம்

டோக்கியோ ஒக் 19

ஜப்பானிய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 18 மாணவர்கள் இரண்டாவது உலக யுத்தத்தில் காலமான ஜப்பானிய வீரர்களின் அஸ்திகளைச் சேகரிக்க இந்தியா. பர்மா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிருர்கள்.

இம்மாணவர் கோஷ்டி பர்மாவில் மாண்டலே என்ற பகுதியில் கூடுதலான ஆராய்சி செய்து அஸ்திகளை கண்டுபிடிப்பார்கள் என்று தெரிகிறது.

......

### அங்கவீனருக்கு சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம் செவ்

இலங்கை அரிமாசங்கம் [லயன்ஸ் கிளப்] இன்று மாலை யாழ்ப்பாணத்திலுள்ள அங்கவீனர் ஒருவருக்கு முச்சக்கரவண்டியொன்றை அன்பளிப்பாக வழங்கவிருக்கின்றது.

அரசாங்க ஆதிபர் தலைமையில் இவ்வன்பளிப்பு வைபவம் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெறும்.

# "தேர்தலைப்பற்றி நான் அக்கறையாக கேட்கவில்லை"

## மன்னுர் தேர்தல் ஆட்சேப வழக்கு

யாழ்ப்பாணம், செவ்

மன்னுரில் நான் இருந்த போது கடந்த தேர்தலைப் பற்றி யாருடனும் அக்கறையாகக் கேட்கவில்லை. நான் மன்னுரில் இருக்கும்போது தேர்தல் கூட்டங்கள் ஒன்றும் நடக்கவில்லை.

மன்னுர் தேர்தல் ஆட்சேப வழக்கில் அட்வகேட் எம் திருச்செல்வம் குறுக்கு விசாரணை செய்கையில் மஜீத் மௌலவி மேற்கண்டவாறு கூறினுர்.

மஜீத் மௌலவி தொடர்ந்து கூறியதாவது: இலங்கை முழுவதும் வியாபாரத்திற்காகவும் பள்ளிகளுக்கும் போவேன். மன்னுர் உப்புக்குளம் பள்ளிக்கும் தாராக்குண்டு பள்ளிக்கும் போனேன். இரண்டிலும் மார்க்க வைபவத்தில் பங்கு பற்றினேன். எஸ். பி. மகமட்டை கடையில் சந்தித்து பல விஷயங்கள் கதைத்தேன். தேர்தல் எப்படி நடக்கும் என்று தெரியாது எனக் கூறினுர். அவருக்கு வாக்கு இல்லை.

நீதி: ஆதம்லெப்பையை எவ்வளவு காலமாகத் தெரியும்?- 4 வருடமாக.

நீதி: முதல் தடவையாக எப்ப அவரைச் சந்தித்தீர்?- பள்ளியில் சேர்ந்தபோது.

வழ: ஆதம்லெப்பைகுடும்பமும் பாடசாலையில் இருந்தார்களா?- ஆம்.

நீதி; எப்ப முதன்முதலாக ஆதம்லெப்பை இலந்தைமோட்டையில் இருப்பதாக அறிந்தீர்?- நான் பள்ளிக்கு வந்தபோது இலந்தைமோட்டையில் லெப்பை படிப்பிப்பதாக அறிய வந்தேன். அதற்கு முன் அவரைத் தெரியாது. அவருடைய இனத்தவர்கள் இலந்தைமோட்டையில் இருப்பது பின்னர் தெரியவந்தது. அவர் சிறிய வயதில் மட்டக்களப்பிலிருந்து இலந்தைமோட்டைக்கு வந்ததாக அறிந்தேன். அவரது மனைவியும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர் என அறிந்தேன்.

வழ: சாகுல்கமீட்டி வயலில்தான் அவர் வேலை செய்கிருர்?- பாடசாலையில் படிப்பித்தார்.

வழ: இப்ப என்ன செய்கிருர்?- தெரியாது.

வழ:- பஸ்ஸில் எத்தனை பரிபாலகர் இருந்தார்கள்?- 4 பேர்.

வழ: முஸ்லிம்களுக்கு நாள் எப்ப ஆரம்பிக்கிறது?- மாலை 6 மணிக்கு.

வழ: சூரியன் அஸ்தமிக்கும்போது?- ஆம்.

வழ: மற்றநாள் சூரியன் அஸ்தமிக்கும்வரை ஒரு நாள்?- ஆம்.

வழ: மன்னுர் பள்ளிவாசலில் நீர் கதீப்பாக நியமிக்கப்பட்டீர்?- ஆம் இமாம் ஆகவும் நியமிக்கப்பட்டேன்.

வழ: லெப்பை என்பது யார்?- பொதுப்படையாக கூறும்வார்த்தை.

வழ: லெப்பை என்ருல் அர்த்தமென்ன?- அடி பணிந்தேன் என்று அர்த்தம்

விசாரணை இன்று காலை 9-30 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

(முற்பகல் விசாரணை விபரம்: 2-ம் பக்கம்)


ரொலறம்ஸ்

**தீபாவளி மலிவுவிற்பனை**

புதிதாக வரவழைக்கப்பட்ட
வெள்ளை லோங் சிலீவ்ஸுடன்
ஆடவருக்கான சைஸ்களில்
ஹென்லி சுப்றிமா
சேட்டுகள்
ரூபா 23/- கட்டுப்பாட்டு விலையில் கிடைக்கும்
சொற்ப கையிருப்பே உண்டு
எனவே முந்துங்கள்

ரொலறம்ஸ்

46, மெயின்வீதி (போன்: 7099) யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஆவரங்கால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் புத்தூர் புதிய 6 நெசவு தறிகள் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ஆவரங்கால் பல. நோ. கூட்டுறவுச் சங்கம், ஆவரங்கால், புத்தூர். 2350

சொட்டடி பீச் றேட்டில் 25 பரப்புக்காணி ஒருமிக்கவும், துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கலாம். தொடர்பு கொள்ளவும் திருமதி கே. கே. சுப்பிரமணியம் இல. 42, கொட்டடி, யாழ்ப்பாணம். 2334

மூன்றுந்தவணை மாணவர் பயிற்சி பெறவும், N.P T.A பரீட்சையில் சித்தி பெறவும் ஏற்றவை. வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை. ஐந்தாந்தர வினாப்பத்திரங்கள்-கணிதம், தமிழ், இந்துசமயம், ஆங்கிலம், சூழல் ஆகிய எல்லாப் பாடங்களுக்கும் ஆக்கப்பட்டுள்ளன. விலை சதம் 60. கூடுதலாக எடுப்பவர்களுக்குக் கழிவுண்டு. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 2339

## ஊநூ தலைமறைவு

பாங்கொக், அக். 19

முன்னாள் பர்மியப் பிரதமர் திரு. ஊநூ தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கிலிருந்து வேறு பகுதிக்குச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. ஆனால் அவர் தாய்லாந்தின் எப்பகுதிக்குச் சென்றிருக்கிறார் என்பது தெரியவில்லை.

பர்மிய இராணுவத் தலைவர் திரு. நீவினால் பர்மிய ஆட்சி 1958ல் கைப்பற்றப்பட்ட பொழுது அப்பொழுது பர்மியப் பிரதமராக இருந்த ஊநூ தாய்லாந்துக்குச் சென்று தஞ்சம் கோரினார். அரசியலில் ஈடுபடமாட்டார் என்ற உறுதிமொழியின் பேரில் தாய்லாந்து அரசாங்கம் தஞ்சம் அளித்தது.

ஆனால் திரு. ஊநூ அண்மைக்காலத்தில் பர்மாவின் அரசியலில் இரகசியத் தொடர்பு கொண்டிருந்தார் என்று கருதப்பட்டது. இவரது திடீர் இடமாற்றத்திற்கு அரசியல் காரணமாக இருக்கலாமெனப் பேசப்படுகிறது.

## பருத்தித்துறை நகரசபை
## கேள்விப்பத்திர- அறிவித்தல் 1971

பருத்தித்துறை நகரசபைத் தலைவரால் கீழ்க்காணும் 1971-ம் ஆண்டு குத்தகைகளுக்கு ஒக்டோபர் மாதம் 31-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரையும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் ஒக்டோபர் மாதம் 30-ம் திகதிவரை குறித்த பிணைப்பணமும், கேள்விப்பத்திர நிர்ணய விலையும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்

| | பிணைப்பணம் | கேள்விப்பத்திர நிர்ணய விலை |
|---|---|---|
| 1. காய்கறிச்சந்தை | 250-00 | 25-00 |
| 2, மீன் சந்தை | 150-00 | 15-00 |
| 3 வான், மாட்டுவண்டிக் காலை | 50-00 | 5-00 |
| 4. ஆட்டிறைச்சிக்கடை | 50-00 | 5-00 |
| 5. மாட்டிறைச்சிக்கடை | 50-00 | 5-00 |

மேலும் விபரங்களை பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

வ. தர்மலிங்கம்
தலைவர்.

நகரசபை அலுவலகம்
பருத்தித்துறை. 16-10-70

2522

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 20—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பாட்டு.

இரவு 6-15 நாட்டுப்பாடல்கள், 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 வயலின், 7-15 நாடகம், 7-45 மெல்லிசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 புல்லாங்குழல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## உதைபந்தாட்டம்

உடுப்பிட்டி, திங்கள்

வதிரி அம்பாள் இளைஞர் கழக விளையாட்டுக் கோஷ்டியினருக்கும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீரர்களுக்குமிடையில் நடைபெற்ற சிநேகித பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் வதிரி அம்பாள் இளைஞர் கழக வீரர்கள் 2- 1 கோல்களால் வெற்றியீட்டினர்.

திரு சண்முகநாதன் மத்தியஸ்தராகப் பணியாற்றினார்.

0 0 0

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு வீரர்களுக்கும், வடமராட்சி ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர்களுக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்ட மோதலில் வடமராட்சி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2—0 கோல்களால் வென்றது.

இப்போட்டிக்குத் திரு செல்வராசா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## வெள்ளத்தை தடுக்க முயற்சி

பருத்தித்துறை, திங்கள்

மாரிகாலத்தில் பல தாழ்ந்த பகுதிகளும் மழைவெள்ளத்தால் பாதிக்கப்படாது தடுப்பதற்காக புத்தூர் கிராமசபை, பல்வேறுபகுதிகளிலிருந்து வரும் வெள்ளத்தையும் நுணுவில் குளத்திற்குள் பாய்ச்சும் நோக்கத்துடன் பாரிய வாய்க்கால்களை கட்டி மேற்படி குளத்தை விஸ்தரிப்பதற்காகப் பணம் ஒதுக்கியுள்ளது- இவ்வித முயற்சிமூலம் கோடைகாலத்தில் மேலதிக நீர் கிடைத்தால் அதைவிவசாயத்திற்கு பயன் படுத்தலாமென்றும் தெரிகிறது.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# ‘பள்ளியை விட்டு விலகாதீரென பரிபாலகர் என்னிடம் கூறினார்கள்’

## 5-வது தினமாக தொடர்ந்து விசாரணை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"நான் பலதடவை பள்ளியை விட்டு விலகப்போவதாக சொல்லிவந்தேன். பள்ளி பரிபாலகர்கள் என்னைக்கூப்பிட்டு. என்னை பள்ளியை விட்டு விலக வேண்டாமென்று கூறினார்கள், அஜீஸ் மரைக்கார் ரொம்பக் கஷ்டம் கொடுப்பதாகவும் அதனால் விலகப்போவதாகவும் கூறினேன்."

மன்னார்தேர்தல் ஆட்சேப வழக்கில் அட்வகேட் எம் திருச்செல்வம் குறுக்குவிசாரணை செய்கையில், மஜித் மௌலவி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு ஐந்தாவது தினமாக நேற்று யாழ்ப்பாணத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

மஜீத் மௌலவி தொடர்ந்து கூறியதாவது:- கடந்த தேர்தலில் வாக்களித்தேன். நிந்தாவூர் தொகுதியில் வாக்களித்தேன் அங்குதான்குடியிருக்கிறேன். மன்னாருக்கு 68-ம் ஆண்டு வந்தேன் ஒரு கிழமை தங்கியிருந்தேன், நிரந்தரமாக ஒரு இடத்தில் தங்கியிருக்கவில்லை, 69-ம் ஆண்டு இரு தடவை மன்னாருக்கு வந்தேன். மார்ச் அல்லது ஏப்பிரலில் வந்தேன். ஏழு எட்டு நாட்கள் தங்கியிருந்தேன். 69-ம் ஆண்டுக் கடைசியிலும் மன்னாருக்கு வந்தேன். அரிசிக் கூப்பன் கொஞ்சநாள் மன்னாரில் இருந்தது. பின் அக்கரைப்பற்றில் இருந்தது. பின் மன்னாரில் கூப்பனை மாற்றினேன். என் மனைவி கூப்பனை மன்னாருக்கு அனுப்பினார்.

நீதியரசர்: மனைவி பிள்ளைகளுக்கு நிரந்தரமாக குடியிருக்க வசதியுண்டா?- ஆம்.

நீதி: எங்கு?- அக்கரைப்பற்றில்.

நீதி: அவர்களை யார் கவனிப்பது?- பணம் அனுப்புவேன்

இந்தியாவுக்குப் போகுமுன் கூப்பனை ஒப்படைக்க வேண்டும்?- ஆம்.

வழ: அதற்குத் தான் மன்னாருக்கு மாற்றினீர்?- ஆம்.

வழ: 49ல் இலங்கைக்கு வந்து [illegible] தங்கியிருந்தீரா?- ஆம்.

வழ: அங்கு மௌலவியாக [illegible]

வழமையாக அல்ல.

வழ: அடிக்கடி போவீர்?- இல்லை

வழ: சாப்பாடு?-சிலநேரம் அங்கு சாப்பிடுவேன். சில நேரம் கடையில் சாப்பிடுவேன்.

வழ: ஆதம்லெப்பைஉமது கிராமத்தை சேர்ந்தவர்?- மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

மஜித் மௌலவி தொடர்ந்து கூறியதாவது: ஆதம் லெப்பை இக்கோர்ட்டில் ஒரு சாட்சியாக வந்திருக்கிறார். அவரை வெளியில் பார்த்திருக்கிறேன். அவரின் சொந்த ஊரைப்பற்றி நான் அவரை விசாரிக்கவில்லை.

வழ: நீர் ஆதம் லெப்பை மனைவியுடன் நய்ப்பாக இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டீர்?- இல்லை.

வழ: பரிபாலகர் உம்மை எச்சரிக்கை செய்யவில்லையா?- நான் விலகப் போகிறேன் என்றதும், என்னை தொடர்ந்து இருக்கும்படி கூறினார்கள்.

வழ; அந்த நேரம் உமது மனைவி உம்முடன் இருக்கவில்லை?- இல்லை.

வழ: ஆதம் லெப்பை மனைவியுடன் உறவாக இருந்தீரென குற்றம்சாட்டப்பட்டீர்?- இல்லவே இல்லை. நான் உண்மை சொல்கிறேன்.

வழ: பரிபாலகர்முன் ஆஜராகும்படி உமக்கு கட்டளையிட்டார்களா?- பரிபாலகர் வரும்படி மொகதீன் தெரிவித்தார்.

நீதி: சபைக்கு முன்னால் கேட்கப்பட்டது?- ஆம்

நீதி: என் சூழ்நிலையில் அப்படி கேட்கப்பட்டீர்?- அஸீஸ் மரைக்காயர் ரொம்ப கஷ்டம் கொடுக்கிறார் அதனால் இருப்பது கஷ்டமாயிருக்கிறது என்றேன் [illegible] ஒருதடவை கலியான வீட்டிற்குச் சென்றிருந்தேன். மரைக்கார் என்னை [illegible]

லையா?- இல்லை

வழ: அக்கரைப்பற்றில் கமம் செய்தீர்? ஆம்

மஜித்மௌலவி தொடர்ந்து கூறியதாவது நான் கொந்தராத்து வேலைகள் செய்துவந்தேன் முதல் வாய்க்கால்வேலைசெய்தேன் ரெண்டரில்லாமல் எனக்கு கொந்தராத்து கொடுத்தார்கள் 2கொந்தராத்து 20,000 ரூபா விற்குள் செய்தேன் 69-ம் ஆண்டு கொந்தராத்தராகபதிவு செய்தேன்

வழ: நல்ல லாபம்கிடைத்தது?- செலவு போக 2000 ரூபா லாபம்கிடைத்தது

வழ; வேறுகொந்தராத்து எடுத்திருக்கலாம்?- வேறு வேலை இல்லை வேலைகளை நிறுத்திவைத்திருக்கிறார்கள்

வழ: இந்த வருடம் முதல் தடவையாக ‘மன்னாருக்கு எப்ப வந்தீர்?- மே மாதம் 3-ம் திகதி.

வழ: நியமனம் தாக்கல் செய்தபின்?-ஆம்.

வழ: 20-ம் தேதி திரும்ப மட்டக்களப்பிற்கு சென்றீர்?-ஆம்.

வழ: வாக்குப் போடுவதற்காக சென்றீர்?-ஆம்.

வழ: மே மாதம் 3ம் தேதி முதல் 20ம் தேதிவரை மன்னாரில் ரஹிமுக்கு ஆதரவாக வேலைசெய்யவந்தீர்?-இல்லை.

வழ' கொந்தராத்துடன் திருப்தியாக இருந்தீர்?- ஊதுபத்தி வியாபாரமும் செய்தேன்,

வழ: ரஹிமின்கூட்டத்தில் பேசவில்லையா?-இல்லை.

வழ: அவருக்கு ஆதரவு தேடவில்லை?-இல்லை.

வழ: ரஹிமை சந்திக்கவில்லையா?-கண்டிருக்கிறேன்

வழ' அவருடன் கதைத்தீரா?-ரோட்டில் சந்தித்தேன். சந்தர்ப்பவிதமாக சந்தியில் சந்தித்தேன்

நீதி: ரஹிம் சந்தியில் என்ன செய்துகொண்டிருந்தார்? ஆட்களுடன் கதைத்துக்கொண்டிருந்தார்'

நீதி: தேர்தலைப் பற்றி கதைக்கவில்லை?-இல்லை.

நீதி: தேர்தலில் அவர் போட்டி போடுவது தெரியுமா?-ஆம்

வழ: ரஹிமின் வீட்டிற்கு கிட்ட உள்ள அறையில்தான் தங்கியிருந்தீர்?- கொஞ்சம் தூரம்.

வழ; எவ்வளவு தூரம்? -கால்மைலில் பாதி.

மஜித் மௌலவி தொடர்ந்து கூறியதாவது: சிநேகிதர்களை சந்திக்கவும், வியாபாரமாகவும் மன்னாருக்கு மே 3-ம் திகதி போனேன். முஸ்லிம் ஹோட்டல் முதலாளி எனது நண்பர். அவரது எஸ், பி முகமட் அருடைய ஹோட்டலுக்கு ஊதுபத்தி கொடுத்து வந்தேன், வியாபார விஷயமாக முகமட் சுல்தானை சந்தித்தேன். அவர் எனது ஊதுபத்திகளை கடையில் கொடுத்துவிட்டு பணம் வாங்குவார், மன்னாரில் வேலை முடிந்ததால் மட்டக்களப்பிற்கு போனேன். காரணமில்லை தேர்தல் வந்தது, வாக்கு போடவேண்டும். மன்னார் தேர்தல் பற்றி அக்கறைப்படவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

### வடமாகாணத்தில் முதல் தடவையாக

# ‘ஏழுபேர்’ அடங்கிய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், செவ்:

யாழ் மாவட்ட அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் அடுத்த மாதம் முற்பகுதியில், ‘ஏழுபேர்’ கொண்ட உதைபந்தாட்டப் போட்டியொன்று நடைபெறவிருக்கின்றது

இப்போட்டி யாழ் மாவட்டத்தில் உள்ள அரசாங்க இலாகாக்களிடையே மட்டும் நடாத்தப்படவிருக்கின்றது. ‘ஏழுபேர்’ அடங்கிய உதைபந்தாட்டப் போட்டி வடமாகாணத்தில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி இம் மாதம் 30-ம் திகதியென்றும், அடுத்த மாதம் முற்பகுதியில், இந்தப் போட்டி யாழ். கோட்டை மைதானத்தில் மிகவிமரிசையாக ஆரம்பமாகவிருப்பதாகவும், மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி திரு ஈ. கே. குமரையா தெரிவித்தார். (தே. நி)

### ‘ஈழநாடு’ ஆதரவில்

# தீபாவளிப் பெருவிழா

‘ஈழநாடு’ ஆதரவில் இம்முறை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி, கலந்து கொள்ள விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண் [illegible] மூன்று பிரதிகளை நீங்கள் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். ‘திருவாளர் ஸ்டீல்சன்சை’ நீங்கள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) ஜெயலலிதா — அசோகன்
தினசரி 4 காட்சிகள் நடித்த

## மாட்டுக்கார வேலன்

யாழ். வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — காஞ்சனா
நடித்த

## சாந்தி நிலையம்

7-வது வாரம்
வெலிங்டன் யாழ்நகர்]
(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்

20·10·70

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின்
மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின்
உள்ளத்தை உருக்கும் "கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

## துலாபாரம்

(தமிழ்)
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்
★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்

## உயர்ந்த மனிதன்

[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]

விஸ்தரிப்பதற்காகப் பணம் ஒதுக்கியுள்ளது- இவ்வித முயற்சிமூலம் கோடைகாலத்தில் மேலதிக நீர் கிடைத்தால் அதை விவசாயத்திற்கு பயன் படுத்தலாமென்றும் தெரிகிறது.

### வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
## பாலும் பழமும்

### ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி
நடித்த
## அறிவாளி

### ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி-சௌகார் ஜானகி
நடித்த
## படிக்காத மேதை

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Guiliano Gemma
in
FORT-YUMA GOLD
(Scope-color)

**REGAL**
Jaffna
Daily 4 Shows
Sydney Poitier
in
TO SIR, WITH LOVE

...அதற்குத் தான் மன்னாருக்கு மாற்றினீர்?-ஆம்.

வழ: 49ல் இலங்கைக்கு வந்து அக்கரைப்பற்றில் தங்கியிருந்தீர்?-ஆம்.

வழ: அங்கு மௌலவியாக கடமையாற்றவில்லை?-இல்லை

வழ: முதல் முறையாக மௌலவியாக் கடமையாற்றியது மன்னாரில்?-சம்பளத்துடன் கடமையாற்றியது மன்னாரில்.

வழ: அதற்கு முன் பயிர் செய்தீரா?-ஆம்.

வழ: அந்தக் காணி உமது பெயரில் இருக்கிறதா?-3 ஏக்கர் எனது பெயரில் உண்டு.

வழ: 64ல் மன்னாருக்கு வந்து பள்ளிவாசலில் சேர்ந்தீர்?-ஆம்.

வழ: உமக்கு சம்பளம் கிடைத்தது?-ஆம்

வழ: எவ்வளவு?- ஆரம்பத்தில் 150 ரூபா. பின் குடும்பத்தோடு வந்தபோது 200 ரூபா கிடைத்தது

வழ: தனிமையாக மன்னாரில் எவ்வளவுகாலம் இருந்தீர்?- 2 வருடம்.

வழ; எங்கேகுடியிருந்தீர்?-பள்ளிவாசலில்.

வழ: சாப்பாடு எங்கே சாப்பிட்டீர் - கடையில்.

வழ: அந்த பள்ளிக்கு அருகில் அரபிக்பாடசாலை உண்டு?-ஆம்.

வழ: அப்பாடசாலையை நடத்துவது சகுல்ஹாமிட்?-ஆம்.

வழ: அவர் ரஹிமுக்கு நெருங்கிய உறவினர்?-ஆம்.

வழ: அப்பாடசாலையில் ஆதம்லெப்பை ஆசிரியராக இருந்தார்?-ஆம்

வழ: அவரும் குடும்பத்துடன் இருந்தார்?-ஆம்

வழ: பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்தார்?- ஆம்.

வழ: நீர் அவர் வீட்டில் சாப்பிட்டீர்?- சிலநேரத்தில்

...அவர் மரைக்காயர் ...ம்ப கஷ்டம் கொடுக்கிறார் அதனால் இருப்பது கஷ்டமாயிருக்கிறது என்றேன்

நான்ஒருதடவை கலியான வீட்டிற்குச் சென்றிருந்தேன். மரைக்கார் என்னை கையெழுத்துப் போடச் சொன்னார். வைபவத்தை இஸ்லாம் முறைப்படிசெய்த பின் தான் கையெழுத்துப் போடுவேன் என்றேன் அப்படியல்ல நான் ஊர்மரைக்கார். அதனால்செய்யத்தான் வேண்டும் என்றார். யார் சொன்னாலும் சட்டத்தின் படிதான் செய்வேன் என்றேன். அவர் எழும்பிப் போய்விட்டார் அதன் பின் மாப்பிள்ளையை உட்கார வைத்து. அதற்கு ...யதைச் செய்து கையெழுத்திட்டேன் அதனால் அவர் ஆத்திரமடைந்திருந்தார்.

வழ: அந்த நேரத்தில் மரைக்கார் ஒரு பரிபாலகராக இருக்கவில்லை?-இல்லை.

வழ: உமது குடும்பம் மன்னாருக்கு வந்தது?-ஆம்.

வழ:இதேமாதிரிஒருமுறைப்பாடு மீண்டும் இருந்தது?-அப்படி ஒன்றுமில்லை.

வழ: 2 வருடத்திற்கு பின்?-இல்லை.

வழ: மறுமுறையும் பரிபாலகர் கூட்டம் நடந்ததா-? இல்லை.

வழ: பரிபாலகர் உம்மை பள்ளியிலிருந்து நீக்கினார்கள்?-நிக்கவில்லை நான் விலகினேன்

வழ, உமக்கு நல்லசம்பளம் கிடைத்தது?-200 ரூபா கிடைத்தது

வழ: மன்னாரில் உமக்கு வாக்குரிமை இருந்ததா?-இல்லை

வழ: மீண்டும் அக்கரைப்பற்றுக்குப் போனீர்?-ஆம்,

வழ: மன்னாரில் இருக்கும் போது காதிக் கோட்டிற்கு வரும்படி கூறப்பட்டதா?-இல்லை

வழ: ஒன்றும் நடக்கவில்

# தீபாவளிப் பெருவிழா

'ஈழநாடு' ஆதரவில் இம்முறை யாழ். நகரில் நடைபெறவிருக்கும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, கலைநிகழ்ச்சி, வாணவேடிக்கை ஆகிய அம்சங்கள் நிறைந்த தீபாவளி விழாவுக்கான ஏற்பாடுகளை இதற்கான குழு தீவிரமாச் செய்து வருகிறது.

வடபகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தலைமையில், 'ஸ்டீல்ஸன்ஸ்' திரு. எம். பூபாலசிங்கம் ஜே.பி; 'யாழ்மெற்றல் இன்டஸ்றீஸ்' திரு. கே. இராஜலிங்கம் ஆகியோரை இணைக் காரியதரிசிகளாகக் கொண்ட இக்குழுவில் சமூக சேவைப்பகுதி அதிகாரி திரு. என். சிவசிதம்பரம்; யாழ். மாநகரசபை மராமத்து என்ஜினியர் திரு இ. வைத்திலிங்கம், வெடிமருந்து பரிசோதகர் திரு. எஸ் பொன்னம்பலம், பொலிஸ் இன்பெக்டர்கள் திரு. எம். மாணிக்கம், திரு. வி. கார்த்திகேசு. 'ஈழநாடு' 'ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. எஸ். எம். கோபாலரத்தினம்' ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்,

யாழ் விளையாட்டு அமைப்புக் குழுவினால் வடமாகாண பொலிசாரின் ஒத்துழைப்புடன் 'ஈழநாடு' ஆதரவில் தீபாவளி விழா நடைபெறுகிறது.

தீபாவளியன்று (29.10.70) பிற்பகல் ஒருமணிக்கு யாழ் கோட்டை மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி ஆரம்பமாகும் 'ஏ' 'பி' பிரிவுகளாகநடைபெறும் இப்போட்டியில் இரட்டைத் திருக்கல் வண்டிகளே கலந்துகொள்ளும். மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி அனுப்பவேண்டும். 'ஈழநாடு', த. பெ. எண்- 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கோ, திரு எம். பூபாலசிங்கம்; ஜே பி., 'ஸ்டீல்சன்ஸ்', ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கோ அனுப்பலாம். கடிதஉறையின்இடது மேல் மூலையில் 'சவாரிப் போட்டி' என்று குறிப்பிடப்படவேண்டும். மேற்கண்ட விலாசங்களில் விண்ணப்பங்களை நேரிலும் கொண்டு வந்து கொடுக்கலாம்.

### கலைவிழா

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி முடிந்ததும் யாழ் திறந்த வெளிஅரங்கில் கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். ஈழத்தின் சிறந்தகலைஞர்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்கள். நாட்டியம்-நாடகம், மெல்லிசை, ஆகிய அம்சங்கள் இதில் இடம்பெறும்.

### தீபாவளிப்பரிசு

'திருவாளர் ஸ்டீல்சன்ஸ்' இன்னும் இரண்டு மூன்று தினங்களில் உங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட விருக்கிறார். அவரது புகைப்படம் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் தீபாவளித் தினத்தன்று வரை நீங்கள் யாழ், நகர வீதிகளிலும். பிற்பகலில் மாட்டுவண்டிச் சவாரி நடைபெறும் இடத்திலும் அவரை நீங்கள் காணலாம் அவரை நீங்கள் சரியாக அடையாளம் கண்டீர்களானால் உங்களுக்கு தீபாவளிப் பரிசாக 100 ரூபாய் கிடைக்கும். அன்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் மூன்று பிரதிகளை நீங்கள் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். 'திருவாளர் ஸ்டீல்சன்சை' நீங்கள் கண்டு கொண்டீர்களானால் கையில் வைத்திருக்கும் 'ஈழநாடு' பத்திரிகைகளினால் அவர் தோளில் மெதுவாகத் தட்டி 'திருவாளர் 'ஸ்டீசன்ஸ்' உங்களை அடையாளம்கண்டு கொண்டேன் என்றுகூறவேண்டும். நீங்கள் அடையாளம் காணப்பட்டவர் திருவாளர்ஸ்டீல் சன்ஸானால் அவர் ஒப்புக் கொள்வார்.

அன்றுமாலை நடைபெறும் கலைவிழாவில் உங்களுக்கு பரிசுத் தொகையான 100 ரூபாயும் வழங்கப்படுப்;

இதைவிட சினிமாப் புதிர் பரிசுத் திட்டமொன்றும் விரைவில் அறிவிக்கப்படும்.

தீபாவளியென்றால் வாணவேடிக்கை, தீப அலங்காரம் இல்லாமலா? இவையெல்லாம் இருக்கவே இருக்கின்றது

விபரங்களை அறிவதற்குத் தொடர்ந்து 'ஈழநாடு' படியுங்கள்.

— —

## புதிய தொழிற்சாலை

கோட்டை, திங்கள்

ரயர் நிரப்பும் தொழிற்சாலையொன்றையும் ரயர் தொழிற்சாலையொன்றையும் தொடங்குவது பற்றி இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆலோசனை செய்து வருவதாக இ. போ. சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கென வெளிநாட்டுக் கடன் பெறுவதுபற்றியும் ஆலோசனை செய்யப்படுகிறதாம்.

## தீபாவளி மலிவு விற்பனை!

புதிதாக வரவழைக்கப்பட்ட மெசின் வேலைப்பாடு போட்ட சிவ்ற் (Shift) துணிகள், பிளேயின் நைலக்ஸ் சேலைகள்
12 அழகான நிறங்களில்
உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவு செய்வதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

# டயரும்ஸ்

54, 60, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

இப்போட்டியில் பங்குபற்றக் கூடிய தகுதியை நான் அத்தாட்சிப் படுத்துவதுடன், இப்போட்டியில் பங்குபற்றுவதனால் எனக்கோ எனது உடைமைக்கோ ஏற்படும் காயம் அல்லது சேதங்களுக்கு நானே பொறுப்பாளி என்பதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். எனக்கேற்படக் கூடிய காயம் அல்லது நஷ்டத்துக்கு போட்டிநிர்வாகிகளிடமிருந்தோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடமிருந்தோ அல்லது நியமிக்கப்பட்ட எந்த அதிகாரிகளிடமிருந்தோ எந்தவித நஷ்டஈடும் கோரமாட்டேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

போட்டியாளரின் பெயர் ..............................................

பங்குபற்றும் பிரிவு —..............................—....................

விலாசம் ..............................................

வயது ..............................................

மேற்கூறிய தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.................. ..................................
திகதி போட்டியாளரின் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவில் கடத்தப்பட்ட

# பிரிட்டிஷ் ராஜதந்திரி இன்னமும் உயிருடன் இருக்கிறார்

## அவர் கைப்பட எழுதிய கடிதம் கிடைத்தது

ஒட்டாவா, அக். 19

குவபெக் தீவிர தேசிய வாதிகளால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிரிட்டிஷ் வர்த்தக அதிகாரி ஜேம்குரொஸ் இன்னும் உயிருடனும் உடல் நலத்துடனும் இருக்கிறார் எனத் தகவல் கிடைத்துள்ளது.

பிரிட்டிஷ் வர்த்தக ராஜதந்திரி தன் கைப்பட ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் தான் இன்னமும் உயிருடன் இருப்பதாகவும், உடல்நலத்துடன் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். அத்துடன் குவபெக் தீவிர தேசியவாதிகளின் கோரிக்கைப்படி சிறையில் இருக்கும் தேசியவாதிகள் 23 பேரை விடுதலைசெய்வதோடு, 5 லட்சம் டாலர் தங்கமாகக் கொடுத்துத்தன் உயிரைக் காப்பாற்றுமாறு அவர் அக்கடிதத்தில் எழுதியுள்ளார், இக்கடிதத்துடன் ஓர் அறிக்கையையும் அனுப்பியுள்ளார். இக்கடிதம் மொன்றியேல் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கடிதம்பற்றி எவ்வித கருத்தும் தெரிவிக்க அவர்கள் மறுத்துவிட்டார்கள். குவபெக் தேசிய தீவிர வாதிகளின் கோரிக்கைகள் நிறைவேருத பட்சத்தில் திரு குரொஸும் கொலை செய்யப்படலாம் என அஞ்சப்படுகிறது. அவரது உயிரைக்காப்பாற்ற பொலிசார் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குவபெக் தொழில் அமைச்சர் லெப்படேயின் பூதவுடல் நாளை அடக்கம் செய்யப்படும்.

குவபெக் அரசுக்கும், தேசிய தீவிர வாதிகளுக்குமிடையே உள்ள நெருக்கடி நிலையை மாற்றுவதற்கு அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திபிரிட்டிஷ் ராஜதந்திரியின் உயிரைக் காப்பாற்றுவதில் செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது

இதற்கிடையில் கனடியப் பிரதமர் தியுடோ குவபெக் பிரதமரைச் சந்திக்க மொன்றியேலுக்கு திடீர் விஜயம் செய்துள்ளார்.

பிரிட்டிஷ் ராஜதந்திரியையும், குவபெக் தொழில் அமைச்சரையும் கடத்துவதற்குள் துணை செய்தார்கள் என இருவர் மீது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. 27 வயதுடைய டாக்சிச் சாரதி ஒருவரும், 34 வயதுடைய இன்னொருவருமே அவ்விருவருமாவர்.

### பிரிட்டன் கருத்து

கனடாவில் கடத்தப்பட்ட பிரிட்டிஷ் வர்த்தகராஜதந்திரி திரு. ஜேம்ஸ் குரொஸின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நடவடிக்கையை கனடா அரசாங்கம் செய்யுமெனத் தாம் நம்புவதாக பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் டக்ளஸ் ஹியூம் தெரிவித்தார்.

......

## ஐ. அ. கு. தகவல் அமைச்சர் ராஜினமா

கெய்ரே, அக். 19

ஐ. அ. குடியரசுத் தகவல் அமைச்சர் ஐனுப் ஹெய்கால்தனது அமைச்சர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார் இவரது ராஜினமாவை ஐ. அ குடியரசின் ஜனதிபதி அன்வார் சதாத் ஏற்றுக் கொண்டுள்ளதாக கெய்ரோ வானெலி தெரிவித்தது.

திரு. ஐனுப் ஹெய்கால் காலஞ் சென்ற ஜனதிபதி நாசரின் நெருங்கிய நண்பர்களில்ஒருவர் ஐ அ குடியரசுக்கு ஆதரவான செய்திப் பத்திரிகையின் ஆசிரியர் ஆவார்.

தகவல் அமைச்சுக்கு திரு முகமத்சயித் நியமிக்கப்பட்டுள்ளார்.

......

## டாக்டர் பட்டம் பெற்ற பிறவிக் குருடர்

லண்டன், அக். 19

இங்கிலாந்திலுள்ள லீட்ஸ் சர்வகலாசாலையில் சமீபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின்போது ஓர் அதிசயம் நடந்தது. அதாவது பிறவியிலேயே குருடரான ஒருவர் கணிதத் துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றுக் கொண்டதுதான் இந்தப்புதுமை. குருடர் ஒருவர் தூய கணிதத்துறையில் கலாநிதி பட்டம் பெற்றுக்கொண்டது இங்கிலாந்தில் இதுவே முதல் தடவையாகும்.

டாக்டர் ஆர்தர் சாட்டேர்ஸ் எனப்படும் இக்குருடர் பார்வைப்புலனை இழந்திருந்தாலும் விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும் இந்த பிரமிப்பான சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்.

லீட்ஸ் சர்வகலாசாலையில் பேராசிரியராகக் கடமையாற்றும் ஓர் இந்தியரான டாக்டர் ஹயாஞவிஸ் என்பவரின் ஒத்துழைப்பும், உதவியும் காரணமாகவே இக்குருடர் இந்த சாதனையைப்புரிய முடிந்தது. "டாக்டர் ஹயாஞவிஸின் உதவி கிடைக்காவிட்டால் இந்த நிலையை நான் அடைந்திருக்கமுடியாது" என்று இக்குருடர் பட்டமளிப்பு விழாவின் போது கூறினர்.

......

# 'எதிரிக்குப் பின்னல் வந்தவரிடம் ஆயுதம் இருக்கவில்லை'

## கொடிகாமம் கொலைவழக்கில் சாட்சியம்

மட்டுவில், திங்கள்

'நான் கந்தையா கடையிலிருந்து வானெலி கேட்டுவிட்டு தேநீரும் குடித்து சுமார் இரவுஒன்பதரைமணியளவில், வீட்டை நோக்கிப் புறப்பட்டு கண்டிவீதியால் நடந்து சென்றுகொண்டிருந்தேன். நல்ல இருட்டு. தம்பு மாஸ்டர் மில்லடியில் முதலாம் எதிரி கையில் துப்பாக்கியுடன், விரைவாகநடந்து எனது எதிர் திசையிலிருந்து வந்துகொண்டிருந்தார். அவர்பின்னல் வேறு ஒருவர் வந்தார். அவரை எனக்குத் தெரியாது. எனக்குப் பின்புறத்திலிருந்து பளையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு மோட்டாரின் லைட் வெளிச்சத்தின் உதவியால் எதிரியை அடையாளம்கண்டுகொள்ள முடிந்தது. எதிரிக்குப் பின்னல் வந்துகொண்டிருந்தவரிடம் ஆயுதம் எதுவும் இருக்கவில்லை.'

கொடிகாமம் (இராசு) ஆறுமுகம் கனகரத்தினம் கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் கணபதிப்பிள்ளை குலசேகரம் சாவகச்சேரிமாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த வழக்கில் கொடிகாமத்தைச்சேர்ந்த இராசு என்றழைக்கப்படும் ஆறுமுகம் கனகரத்தினம் என்பவரை கடந்த ஜூலை மாதம் 12ந் திகதி இரவு துப்பாக்கியால் சுட்டுக்கொலைசெய்ததாக அதேஊரைச் சேர்ந்த சாமி என்றழைக்கப்படும் சின்னப்பொடி கந்தையா, எஸ். வல்லிபுரம், எஸ். சற்குருநாதன் ஆகியோர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது விசாரணையின்போது குலசேகரம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

முதலாம்எதிரியை எனக்கு 25 வருடங்களாகத் தெரியும். அவர் என்னுடன்கூடப் படித்தவர். அப்பொழுது அவர் ஒரு வெள்ளைச் சாரமும் சட்டையும் அணிந்திருந்தார் அவர் விரைவாக நடந்துகொண்டிருந்தபடியால் நான் அவருடன் எதுவும் பேசவில்லையே தவிர எமக்குள் கோபம் எதுவும் கிடையாது.

நான் வீட்டிற்குப்போய் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்துவிட்டேன். இரவு நடுச்சாமம் போயிருக்கும். கடைக்கார

கிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் அட்வகேட் எஸ் தம்பித்துரை ஆஜரானர்.

அட்வக்கேட் தம்பித்துரை சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்

அட்: கொடிகாமம் பகுதியில் நிறையப் பற்றைகள் தோட்டங்களைச் சுற்றியிருப்பதால் தோட்டக்காரர் அதிகமாகத் , துப்பாக்கி வைத்திருப்பார்கள்?

சாட்: ஆம்.

அட்: அந்த இடங்களில் இரவில் ஒருவர் துப்பாக்கியுடன் போவது அப்பகுதி மக்களுக்கு ஆச்சரியத்தை உண்டுபண்ணுது?

சாட்: ஆம். நானும் அவர் தோட்டப்பக்கம் போவதாகத்தான் நினைத்தேன்.

அட்: அன்று அப்பாதையால் வேறும் பலர் போயிருக்கிறார்கள் ஆனல் அவர்களை உமக்கு அடையாளம் தெரியாது.

சாட்: கிடுகு வண்டில்கள் போயின.

அட்: அன்று இரவு முதலாம் எதிரியை துப்பாக்கியுடன் கண்டது பற்றி பொலிஸ் வரும்வரையாருக்காவது சொல்லவில்லை?

சாட்: ஆம்.

அட்: ஸ்தலத்தில் நின்ற பெண்கள் கட்டிப்பிடித்து சாமி, சற்குரு சுட்டுப்போட்டினம்'' என்று அழுதனர்?

சாட்: ஆம்.

அட்: அப்பொழுது முதலாம் எதிரி துப்பாக்கியுடன் இரவு போனதைக் கண்டதாகக் கூறினீரா?

சாட்: இல்லை.

அட்: சாட்சிகளான சண்முகவடிவேல், யோகநாதன் பொலிசுடன் வந்தபின் அவர்களுடன் பேசினீரா?

சாட்: ஆம்.

சாட்: நீர் கடையில்நின்றபோது யாழ்தேவி போயிருக்குமா?

சாட்: ஆம்.

மாஜி: யாழ்தேவி எங்கே போனது?

சாட்: கொழும்பிற்கு.

மாஜி: கொழும்பிலிருந்து வந்ததைப் பற்றிக் கேட்கிறோம்.

சாட்: அது போய் 15 நிமிடங்களின் பின்தான் நான் புறப்பட்டேன்.

இக்கட்டத்தில் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை ஒத்திவைத்தார்.

## உயிர் தோன்றிய விந்தை: வானத்து எரிகல்லுடன் வந்ததா?

லண்டன். அக் 19

நாம் வசிக்கும் இப்பூமியில் உயிர் உதயமானது எப்படி? வானத்து இருட்திரையைக் கிழித்துக் கொண்டு விழும் எரிநட்சத்திரங்களிலிருந்து அதாவது எரிகல்லிலிருந்து உயிர்க்கூறுகள் பூமியை வந்தடைந்திருக்கலாமென நீண்ட காலத்திற்கு முன்னரே சில விஞ்ஞானிகள் கூறினர். இக்கருத்து நீண்டகாலம் நிலைக்கவில்லை. பூமியிலிருந்தே பூமியின் உயிரற்ற ஜடப் பொருட்களின் நுட்பமான சேர்க்கையிலிருந்தே உயிர் தோன்றியிருக்கிறது என்று பின்னர் விஞ்ஞானிகள் முடிவுகட்டினர். இருந்தும் சமீபத்திய ஆராய்ச்சிகளின்படி எரிநட்சத்திரங்கள் வாயிலாகவே பூமியின்மடியில் ஜீவதாதுக்கள் உருப்பெற்றிருக்கவேண்டுமென்ற கருத்து மீண்டு வலுப்பெற்றுவருகிறது

பூமியில் விழுந்துள்ள எரிகற்களை எடுத்து நுண்நோக்கிக் கருவிகள் மூலம் நுணுக்

வாதம் ஒன்றையும் கிளப்புகிருர்கள். அதாவது எரிகற்கள் பூமியில் விழுந்ததும் பூமியிலுள்ள உயிரியக்கப் பொருட்கள் காலப்போக்கில் அவற்றில் படிந்திருக்கலாம் என்பது இவர்களது வாதம். இதற்கு விடைகாணுவதாயின் எரிகல் ஒன்று பூமியில் விழுந்ததும் தான் தாமதம் பூமியின் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்னர் அதனை உடனடியாக எடுத்துப் பரிசோதனை செய்து பார்க்கவேண்டும் என விஞ்ஞானிகள் எண்ணினர்.

இந்த நிலையில் சென்றவருடம் பெப்ரவரி மாதத்தில் மெக்ஸிக்கோவில் பெரிய அளவிலான எரிகல் ஒன்று விழுந்தது. எரிகல் விழுந்ததும்தான் தாமதம் ஹஸ்டன் சர்வகலாசாலை விஞ்ஞானிகள் அங்குசென்று அதனைப் பவுத்திரமாக எடுத்துவந்து அதன் உட்புறம்வரை பரிசோதனைசெய்து பார்த்தனர். அவர்களுக்கு ஆச்சரியம் விளைவிக்கும்வகையில்

## உத்தரப்பிரதேச

## சட்டசபை அடுத்தமாதம் நடுப்பகுதியில் கூடும்?

### முதலமைச்சர் தகவல்

புதுடில்லி, அக். 19

உத்தரப்பிரதேச சட்டசபையின் கூட்டம் அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறலாமென முதலமைச்சர் திரு. டி. என். சிங் இன்று தெரிவித்தார். ஆனல் எந்தத் திகதியில் கூடுமென்று தன்னுல் அறுதியிட்டுக் கூறமுடியாதென்று அவர் தெரிவித்தார்.

ஐந்து எதிர் கட்சிகள் சேர்ந்து அமைத்த சம்யுத்த விதாயதளத்தின் தலைவரான திரு. டி. என். சிங் நேற்று உத்தரப் பிரதேச முதலமைச்சராகப் பதவி ஏற்ருர்.

உத்தரப் பிரதேசத்தில் நிலவும் நிலப்பிரச்னை தொழில் வரி முதலியவற்றில் தனது அரசுமுக்கிய கவனம்செலுத்தும் என்றும் சிறிய நடுத்தரத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும் என்றும் அவர் நேற்று விடுத்த செய்தியில் தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தரப்பிரதேச அட்டர்னி ஜெனரல் தனது பதவியை ராஜினமாச் செய்துள்ளார்.

## குறி தவறியது!

மாவிட்டபுரம், திங்கள்

மாட்டுக்கு குறிசுட அதிக பணம் வங்கியதாகக் குற்றம்சாட்டப்பட்ட ஒரு கிராமசேவையாளர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். வலி வடக்குக் காரியாதிகாரி பிரிவிலுள்ள இக் கிராம சேவையாளர் மாட்டுக்குக் குறி சுடுவதற்குக் கூடிய பணம் வாங்கியதாக 35 பேர் வரை யாழ்' அரசாங்க அதிபருக்கு புகார் செய்ததையடுத்து இவர்தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

50 சதத்திற்குப் பதில் 1-00 ரூபா வாங்கியதா இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது விசாரணை நடைபெறுகிறது.

## கட்டாக்காலி மாடுகள் பற்றி தீர்மானம்

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி வடக்கில் விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்துவரும் கட்டாக்காலி ஆடு மாடுகளைப் பிடிப்பதற்கு ஆட்களை நியமிக்க வேண்டுமென்று கரவெட்டி வடக்கு விவசாய உணவு உற்பத்திச் சபை அரசாங்க அதிபரைக் கோரியுள்ளது.

கரவெட்டி வடக்கு கிராம சேவையாளர் திரு. கே. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. பிடிக்க முடியாத கட்டாக்காலி கால்நடைகளை சுட்டுக்கொல்ல வேண்டுமென்றும்அரசாங்க அதிபரைக் கோருவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உணவு உற்பத்திப் போட்டியை நடாத்துவதென்றும் கரவெட்டி வடக்கு ஐமூலைத் தெரு வீதியைச் சிரமதான மூலம் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வடிசாராய வழக்கு

## ரூ. 150 அபராதம்

மாவிட்டபுரம். திங்கள்

சட்டவிரோதமாக வடிசாராயம் வைத்திருந்த நபருக்கு மல்லாகம் நீதிபதி 150 ரூபா அபராதம் விதித்தார். ஊரெழு வாசியான சுப்பன் செல்லத்துரை என்பவர் சட்டவிரோதமாகவடிசாராயமும், அதைத் தயாரிப்பதற்குரிய உபகரணங்களும் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையடுத்து மல்லாகம் நீதிபதி எஸ். ஆனந்தக்குமாரசாமி எதிரிக்கு ரூபா 150 அபராதம் விதித்தார்

இவ்வழக்கில் பொலிஸ்தரப்பில் சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். எஸ். நவரத்தினராஜா வழக்கை நடத்தினர்.

## முடவர்களை நடக்கவைக்கும் செயற்கை நரம்புகள்

லண்டன், அக். 19 முடக்கு வாதத்தால் எழு... தகைய செயற்கை நரம்புகளை வைத்துப் பொருத்தி

உடற்பயிற்சி ஆசிரியர்

10 கோரிக்கைகள்

இணுவிலில்

தவறிவிழுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றார்.

# முடவர்களை நடக்கவைக்கும் செயற்கை நரம்புகள்

லண்டன், அக். 19

முடக்கு வாதத்தால் எழுந்து நடக்கமுடியாமல் திண்டாடுபவர்களை எழுந்து நடக்கச்செய்யும் அபார சக்தி வாய்ந்த செயற்கை நரம்புகளை கண்டுபிடித்திருக்கிறார்கள் பிரிட்டிஷ் விஞ்ஞானிகள்.

மூளைக்கும் முதுகந்தண்டெலும்பிற்கும் இடையேயுள்ள நரம்புகள் தொடர்பறுந்து விடுவதால்தான் முடக்குவாதம் ஏற்படுகிறது ஏனென்றால் காலின் அசைவுகளையும், கால் தசைகளின் இயக்கங்களையும்மூளைய-முதுகெலும்பு நரம்புகளே கட்டுப்படுத்துகின்றன. தொடர்பு அறுந்த இடத்தில் இத்தகைய செயற்கை நரம்புகளை வைத்துப் பொருத்திவிட்டால் போதும் முடவர்களால் எழுந்து நடமாட முடியும்

இந்தச் செயற்கை நரம்புகளின் நுட்பமான அமைப்பு ஒரு தொழில் நுட்ப இரகசியமாகவே வைக்கப்பட்டிருக்கிறது புதுமையான மின்காந்த கம்பிகளால் ஆக்கப்பட்ட இந்த 'நரம்புகளை' ஏற்கனவே குரங்குகளில் பொருத்திப்பார்த்ததில் ஆச்சரியமான வெற்றிகிட்டியிருக்கிறது: மனிதனில் இதனைப் பொருத்தி முடக்குவாதத்திற்கு விரைவில் ஒரு விடிவுகாண விழைந்துவருகிறார்கள் இந்த விஞ்ஞானிகள்

# சிரியாவின் அதிபர் ராஜினமா

## பதவிப்போட்டி காரணம்?

பெய்ரூட், ஒக், 19

சிரியா நாட்டின் அதிபரும் பிரதமருமான டாக்டர் அத்தாசி பதவியிலிருந்து ராஜினமாச் செய்திருப்பதாக பெய்ரூட் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து 4 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் அத்தாசி சிரியாவின் அதிபர் பதவியையும் பிரதமர் பதவியையும் ஏற்றார்.

ஆளும் கட்சிக்கிடையே ஏற்பட்ட பதவிப் போட்டியே இவரது ராஜினமாவுக்குக் காரணமென சில செய்திகளும், நாட்டின் தலைமைப் பதவியும் பிரதமர் பதவியும் ஒருவரிடம் இருக்கக் கூடாதென்பதினாலேய டாக்டர் அத்தசி ராஜினமாச் செய்தார் என வேறோர் செய்தியும் கூறுகின்றது. இப்பொழுது மந்திரிசபையில் இருக்கும் இரு சிரேஷ்ட அமைச்சர்களே பிரதமர் பதவியையும் நாட்டின் தலைமைப் பதவியையும் வகிக்கவிருக்கிறார்கள் என இன்னோர் செய்தி கூறுகின்றது.

இச்செய்திகள் கிடைத்த பொழுதிலும் டாக்டர் அத்தாசியின் ராஜினமாப் பற்றி ஊர்ஜிதமான செய்திகள் கிடைக்கவில்லை.

### ஆயுத விற்பனை குறித்து

# சாம்ராஜ்யத் தலைவர்களுடன் ஹீத் பேச்சு நடத்துவார்

லண்டன், அக். 19

பிரிட்டன் தென். ஆபிரிக்காவிற்கு ஆயுதங்கள் கொடுபதுபற்றி சாம்ராஜ்ய நாடுகளுடன் பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத் இவ்வாரம் நடுப்பகுதியில் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது.

சாம்ராஜ்ய நாடுகளுடன் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தையின் முதல் பகுதியாக இந்தியா, பாகிஸ்தான், ஜமேக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் இவ்வாரம் நடுப்பகுதியில் நியுயோர்க்கில் பேச்சுவார்த்தை நடத்துவார்.

தென் ஆபிரிக்காவிற்கு பிரிட்டன் ஆயுதம் கொடுப்பதை சாம்பியா ஜனதிபதி கவுண்டா, கானப் பிரதமர் ஆகியோர் கடுமையாக ஆட்சேபித்திருந்ததோடு, சாம்ராஜ்ய நாடுகளில் இருந்து பிரிட்டனை வெளியேற்ற வேண்டுமென்றும் ஜனதிபதி கவுண்டா கோரியிருந்தார்.

50 சதத்திற்குப் பதில் 1-00 ரூபா வாங்கியதா இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது விசாரணை நடைபெறுகிறது.

### உடற்பயிற்சி ஆசிரியர்

## நினைவுறுத்துக் கழகம்

பருத்தித்துறை, திங்கள்

அகில இலங்கையிலும் உள்ள உடற்பயிற்சி ஆசிரியருக்கான நினைவுறுத்துக்கழகம் இம்மாதம் 23 24,25-ம் திகதிகளில் கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தில் இலங்கையிலுள்ள 143 தொகுதிகளுக்கும் 143 உடற்பயிற்சி ஆசிரியர்கள் தொகுதி ரீதியாக நியமிக்கப்படவிருப்பது பற்றியும் அவர்களுக்கு விதிக்கப்படவிருக்கும் மேலதிக கடமைகளுக்குத் தக்கபடி சம்பள உயர்வு வழங்குவது பற்றியும் ஆலோசிக்கப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

உடற்பயிற்சி ஆசிரியருக்கான பதவி உயர்வுப் பரீட்சை இம்மாதம் 28-ம் திகதி நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பளம் கிடைக்கவில்லையாம்

எழுதுமட்டுவாள், திங்கள்

ஒட்டிசுட்டான், விஸ்வமடு முதலிய விவசாயப்படை முகாம்களில் வேலைசெய்த வடபகுதி விவசாய வீரர்களுக்கு அவர்களது சம்பளங்கள் அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் எழுதுமட்டுவாளைச் சேர்ந்தவர்களுக்கு இது எவ்வித சம்பளமோ அதைப் பெறுவதற்கான பத்திரமோ இதுவரை கிடைக்கவில்லையெனக் கூறப்படுகிறது. விவசாயப் படையைப் புதிய அரசாங்கம் கலைத்தபின்னர் அதில் கடமையாற்றிய இப்பகுதி வாலிபர்கள் பலரும் வேலையின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

## சங்காபிஷேகம்

தாவடி, திங்கள்

தாவடி வடக்கு குழந்தை சிட்டிகணையன் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய நவோத்திர சகஸ்ரசங்காபிஷேகம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பகல் விசேட பூசையும் அன்னதானமும் இடம் பெறும் மேற்படி ஆலய அம்பாளின் "திருவூஞ்சல்" புத்தகமும் வெளியிடப்படும்.

உற்பத்திப் போட்டியை நடாத்துவதென்றும் கரவெட்டி வடக்கு ஐமூலைத் தெரு வீதியைச் சிரமதான மூலம் திருத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 10 கோரிக்கைகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாவட்ட உணவுக்கட்டுப்பாட்டு ஊழியர்கள் பத்துக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்றை யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்ட திகாரியிடம் சமர்ப்பித்துள்ளனர். அவர்களுடையகோரிக்கைகளைப் பரிசீலனைசெய்து நடவடிக்கை எடுப்பதாக அதிகாரி உறுதியளித்துள்ளார்.

## வாலிபர் சேட்டைக்கு முற்றுப்புள்ளி

மாவிட்டபுரம், திங்கள்

பாடசாலை மாணவிகளிடம் சேட்டைகள் புரியமுற்படும் வாலிபக் காடையர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ், எஸ், நவரத்தினராசா உறுதிகொண்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் கல்லூரியொன்றின் வாயிலில் நின்று மாணவிகளிடம் சேட்டைபுரிந்ததாகச் சொல்லப்படும் சில இளைஞர்களை திரு நவரத்தினராசா சமீபத்தில் கைது செய்து பலத்த எச்சரிக்கையின்பின் விடுதலைசெய்தார்.

மாணவிகள் பயமின்றி பாடசாலைக்குச்சென்றுவரக்கூடிய வகையில் இவர் இவ்விதம் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது பெற்றோருக்கு பெரும் நிம்மதியை அளித்திருக்கிறது.

## 'லொறிச்சேவை கூட்டுத்தாபனம்'

பாணந்துறை, திங்கள்

லொறிப் போக்குவரத்துச் சேவைக் கூட்டுத்தாபனமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென போக்கு வரத்து அமைச்சரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று பாணந்துறை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இலங்கை ரயில்வே பற்றி விசாரணைசெய்வதற்கு கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டுமென போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ப்பில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் எஸ். எஸ். நவரத்தினராஜா வழக்கை நடத்தினர்.

### கிணற்றில்

## தவறிவிழுந்து இளம் பெண் மாணம்

மாவிட்டபுரம், திங்கள்

கிணற்றில் தவறிவிழுந்து ஒருபெண் மரணமான பரிதாப சம்பவம் அச்சுவேலியில் நடைபெற்றுள்ளது.

அச்சுவேலியைச் சேர்ந்த எம். ஆசைப்பிள்ளை என்னும் 22 வயது இளம்பெண் கிணற்றில்நீர் அள்ளும்போது தவறி கிணற்றில் விழுந்ததால் இறந்தார்.

இவரின் மரணம் குறித்து விசாரணை நடத்திய அச்சுவேலி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கே. உலகநாதன் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

## புதிய சஞ்சிகை

மாவிட்டபுரம், திங்கள்

'சிலம்பொலி' என்னும் மாத இதழ் ஒன்று இம்மாதம் முதல் வெளிவரவிருக்கிறது.

மாவை கம்பன் கலைக் கழக ஆதரவில் இதுவெளியிடப்படும்.

## துப்பாக்கி வழக்கில் தீர்ப்பு

மாவிட்டபுரம், திங்கள்

சட்ட விரோதமாக சுழல் துப்பாக்கி வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த வழக்கொன்றில் ஒருவருக்கு 250 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. மற்றவர் விடுதலை செய்யப்பட்டார்.

சட்ட விரோதமாக லைசென்ஸ் இன்றி சுழல் துப்பாக்கி வைத்திருந்ததாக தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு எஸ். எஸ். நவரத்தினராசா ஒரு வழக்கு தாக்கல்செய்திருந்தார்

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது எதிரியான எம். வைரமுத்து குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி அவருக்கு 250 ரூபா அபராதம்விதித்து பெண்ணை விடுதலை செய்தார்.

யால் நான் அவருடன் எதுவும் பேசவில்லையே தவிர எமக்குள் கோபம் எதுவும் கிடையாது.

நான் வீட்டிற்குப்போய் இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்துவிட்டேன். இரவு நடுச்சாமம் போலிருக்கும். கடைக்கார கந்தையா பெண்சாதி என் வீட்டிற்கு வந்து என்னை எழுப்பினர். அவர் இறந்தவருக்குச் சொந்தக்காரர், அத்துடன் எனது அயலவர். நான் எழும்பி என்ன என்று கேட்டபோது, சாமி இராசுவைச் சுட்டுப்போட்டாராம் நான் அங்கே போகவேண்டும். எனது வீட்டில் பிள்ளைகள் தனியாக இருக்கிறார்கள். உங்கள் மனைவியை அவர்களுக்குக் காவலாக எங்கள் வீட்டிற்கு அனுப்புங்கள் என்று கேட்டார். உடனே நான் மனைவியை அழைத்துக்கொண்டு போய் கந்தையா வீட்டில் விட்டு கொலை நடைபெற்ற இடத்திற்குச் சென்றேன்.

கொலை நடந்த இடத்தில் ஆட்கள் பலர் கூடி நின்று 'ஐயோ இப்படிச் சுட்டு விட்டார்களே' என்று அழுது கொண்டிருந்தனர். அன்று இரவு முழுவதும் நான் அங்கே நின்றேன். ஆனால் முதலாம் எதிரி துப்பாக்கியுடன் நின்றதைக் கண்டதாக எவரிடமும் சொல்லவில்லை. அடுத்தநாள் காலை பொலிசார் ஸ்தலத்திற்கு வரும்வரை ஸ்தலத்திலேயே நின்றேன். இறந்தவரின் மனைவி, 'சாமியும், சற்குருவும் சுட்டுப்போட்டினம்' என்று அழுது கொண்டிருந்தார். சாட்சிகளான சண்முவடிவேலு, யோகநாதன் ஆகியோரை பொலிசாருடன் வரும்போதுதான் நான் கண்டேன். நான் பொலிசாருக்கும் மாஜிஸ்திரேட்டிற்கும் வாககுமூலம் கொடுத்தேன்.

இந்த வழக்கில் எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் என் அருணசலம், ஸி. பால

## சட்டமறுப்பை அடக்க புதிய ஆயுதம்

நியுயோர்க், அக், 19

அமெரிக்க பாதுகாப்புப் பகுதியினர் ரதிய ரக ஆயுதம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டில் சட்டமறுப்பு இயக்கங்களை நடத்துவோரை அடக்குவதற்குப் பொலிசாருக்கு உதவும்வகையில் இவ்விசேட ஆயுதம் கண்டுபிடிக்கப்பட்டதாம். இவ்வாயுதத்தால் உயிருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதெனத் தெரியவருகிறது.

வாயிலாகவே பூமியின்மடியில் ஜீவதாதுக்கள் உருப்பெற்றிருக்கவேண்டுமென்ற கருத்து மீண்டு வலுப்பெற்றுவருகிறது

பூமியில் விழுந்துள்ள எரிகற்களை எடுத்து நுண்நோக்கிக் கருவிகள் மூலம் நுணுக்கமாக ஆராய்ந்தபோது அதில் உயிரியக்க ரசாயனப் பொருட்கள் இருக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள் இந்த உயிரியக்கப் பொருட்கள் எரிகல்லில் எப்படித் தோன்றின என்பது இன்னொரு கேள்வி? பிரபஞ்ச வெளியிலுள்ள அண்ட சராசரங்களில் ஏற்கனவே உயிரினங்கள் தோன்றியிருக்கலாமென்றும் அதன் பாதிப்புகளால்எரிகற்களில் உயிர்க்கூற்று சேர்மானங்கள் உருப்பெற்றிருக்கலாமென்றும் சிலர்வாதிக்கிறார்கள் ஆனால் இன்னும்சிலர் இதற்கு எதிர்

தும்தான் தாயதம் ஹெஸ்டன் சர்வகலாசாலை விஞ்ஞானிகள் அங்குசென்று அதனைப் பவுத்திரமாக எடுத்துவந்து அதன் உட்புறம்வரை பரிசோதனைசெய்து பார்த்தனர். அவர்களுக்கு ஆச்சரியம் விளைவிக்கும்வகையில் அந்த எரிகல்லில் உயிரியக்க ரசாயன சேர்மானங்கள் அதாவது உயிர்க்கூறுகள் இருக்கக் காணப்பட்டன. எனவே பூமியின் உயிரியக்க பாதிப்புகளால் எரிகல்லில் ஜீவதாதுக்கள் தோன்றவில்லை என்பதை இப்பரிசோதனைநிரூபித்திருக்கிறது. இந்தவகையில் பார்க்கப்போனல் வானமண்டலத்திலிருந்து விழும் எரிநட்சத்திரங்கள் வாயிலாகவே பூமியில் உயிர் உதயமாயிருக்கலாம் என நம்ப இடமிருக்கிறது.

# பெண்கள் புகைப்பது குழந்தைக்கு ஆபத்து!

லண்டன், அக் 19

கீழைத் தேசங்களில் பெண்கள் புகைபிடிப்பது மிகமிகக் குறைவு. ஆனல் மேலைத் தேசங்களிலோ ஆண்களை மிஞ்சுமளவுக்கு பெண்கள்புகைத்துவருகிறார்கள். இப்படி புகைத்துவரும் நாகரீக நங்கையர்க்கு ஓர் அபாய அறிவிப்பு விடுத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

ஏற்கனவே மேற்கொளப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளின் பிரகாரம் கர்ப்பவதியான பெண்கள் புகைத்து வந்தால் கர்ப்பத்திலேயே சிசுக்கள் இறந்துவிடும் பேராபத்து விளையுமென கண்டுபிடிக்கப்பட்டது. அப்படித்தான் குழந்தை உயிருடன் பிறந்தாலும் பிற்காலத்தில் உடற்பலம் குன்றி நோய்வாய்ப்படும் விளைவுகள் ஏற்படக்கூடுமாம். சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் இந்தக் கண்டுபிடிப்புகளை நிரூபிப்பதுடன் கர்ப்பவதியான பெண் புகைப்பிடித்தால் பிறக்கும் குழந்தை பிற்காலத்தில் இருதயநோய்களுக்கு இலக்காகக்கூடுமெனவும் எச்சரிக்கிறது.

லண்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த பிரபல பெண் விஞ்ஞானியாகிய திருமதி ஜீன் பெட்ரிக், பிரிட்டனில் பிறந்த 17000 குழந்தைகளின் உடல்நிலை பற்றி சமீபத்தில் விரிவான விஞ்ஞான ஆராய்ச்சி ஒன்றை நடத்தினர். 1957-ம் ஆண்டு பிறந்த இக் குழந்தைகளில் 120 பேருக்கு பிறப்புவாசியாகவே இருதயக் கோளாறுகள் இருந்தன. இக் குழந்தைகளது தாய்மாரின் உடல்நிலை மற்றும் தீயபழக்கங்கள் பற்றி ஆராய்தபோது இவர்களில் பெரும்பான்மையோர் புகைபிடிக்கும் பழக்கம் உடையவர்கள் என்பது புலனகியது. இதனை ஆதாரமாகக்கொண்டு மேலும் ஆராய்ச்சிகள் நடத்தியதிலிருந்து கர்ப்பவதியான பெண்கள் புகைபிடிப்பதால் கருவூலத்திலுள்ள சிசுவின் இருதயம் வெகுவாக பாதிக்கப்படுகிறதென்பதுநிரூபணமாகியது. ஆகவே பிரவசச்சிக்கல்எதுவுமின்றி குழந்தைகளை ஆரோக்கியமாகப்பெற விரும்பும்பெண்களே புகைப்பதை நிறுத்திக்கொள்ளுங்கள் என்று எச்சரிக்கை விடுக்கிறார்கள் இந்த ஆராய்ச்சியாளர்கள்.

## புதிய நிர்வாகிகள்

மாதகல், திங்கள்

மாதகல் காந்திஜி ச. ச. நிலையத்தின் 8-வது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 7-ம் திகதி நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்: ஐ. ஆறுமுகம் தலைவர்ம. நவரட்ணம். உப தலைவர், அ. மத்தியாஸ் காரியதரிசி: சி' துரைசிங்கம், உபகாரியதரிசி, வ. கந்தசாமி, தனதிகாரி: ஐ. மாணிக்கம்.

7 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

என் அன்னை கற்றுத்தந்த ராமநாமமே என் வாழ்வில் பல இன்னல்களை கடந்து செல்ல உதவியாயிருக்கிறது.

— மகாத்மாகாந்தி.

ஈழநாடு
Eelanadu B. ... Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 3-ந் திகதி (20-10-70)

## திருமலை

எந்த நாட்டு உல்லாசப் பிரயாணிகளும் கண்டுகளிக்கக் கூடிய இயற்கை எழில் நிறைந்தது திருக்கோணமலைத் துறைமுகமாகும். இத்தகைய சிறப்புமிகு துறைமுகத்தை நம்மவர்கள் கவனிக்காமல் விட்டது வருத்தத்துக்குரியது என்று கப்பல் போக்குவரத்து உல்லாசப் பிரயாண அமைச்சர் திரு பி. ஜி. கலுகல்ல கூறியிருக்கிறார். திரு. கலுகல்ல இப்போது திருக்கோணமலைக்கு விஜயம் செய்திருக்கிறார். திருமலை துறைமுகத்தைப் பற்றியும் அதன் எழில்பற்றியும் இப்போதாவது அவர் தெரிந்துகொண்டிருப்பதைப் பாராட்ட வேண்டும்.

திருக்கோணமலைத் துறைமுகம் மட்டுமல்ல திருக்கோணமலையில் கன்னியாய் நீரூற்று', திருக்கோணேஸ்வரம், மற்றும் பல சரித்திரப்பிரசித்திபெற்ற, எழில் நிறைந்த உல்லாசப்பிரயாணிகளை வெகுவாகக் கவரக்கூடிய இடங்கள் நிறையவுண்டு. திருக்கோணமலையில் மட்டுமல்ல வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் உல்லாசப் பிரயாணிகளைக் கவரக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் ஏராளமாக இருக்கின்றன.

திருக்கோணமலைத் துறைமுகத்தைப் பற்றி நம் நாட்டின் அமைச்சர் ஒருவர் இப்பொழுதுதான் நேரில் சென்று அறிந்து அதன் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்டிருக்கிறாரென்றால் ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு மாவட்டத்துக்கு மட்டுமல்ல ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். நாட்டையும் நாட்டு மக்களையும் அவர்களின் குறைநிறைகளையும் தெரிந்துகொண்டால் தான் தமது கடமைகளை அவர்கள் சிறப்பாகச்செய்ய முடியும்.

உல்லாசப்பிரயாணம் நாட்டுக்கு நல்ல வருமானத்தைத் தேடிக் கொடுக்கக் கூடிய ஒரு வாய்ப்புள்ள தொழில். உல்லாசப் பிரயாணத்துக்குப் பொறுப்பான அமைச்சர் திரு. கலுகல்ல திருக்கோணமலைத் துறைமுகத்தைப் பார்த்து வியந்ததுடன் மட்டும் நிற்காமல் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டிலுள்ள இதர இடங்களுக்கும் நேரில் சென்று பார்த்து வரவேண்டும். அமைச்சர்களை ஆடம்பரமாக வரவேற்பதில் மட்டும் அவர்கள் விஜயம்செய்யும் பகுதிகளிலுள்ள மக்கள் கவனம் செலுத்தினால் போதாது தங்கள் தங்கள் இடங்களிலுள்ள வரலாற்று முக்கியத்துவங்களையும் எடுத்துக்காட்டவேண்டியதும் வரவேற்பில் மயங்காமல் உண்மைநிலையை அறிந்துகொள்ள வேண்டியதும் அவரவர் கடமையும் பொறுப்புமாகும்.

# 'எதிலும் பொதுநலம் வேண்டும்'

## இலங்கரத்தின திட்டம்

திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திலுள்ள ஓர் உயர் அமைச்சரின் போக்கில் எல்லா விவகாரங்களையும் விட்டுவிட்டால் இலங்கையிலும் மாவோ வழியே பரவிவிடும்

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்ன சமீபத்தில் மக்கள் சீனக்குடியரசுக்குச் சென்று வர்த்தக, உதவி உடன்படிக்கைகளைச் செய்துவிட்டு நாடு திரும்பியுள்ளார் நாடு திரும்பிய அவர் நாட்டு மக்களின் உடை, சிந்தனை, தொழில், கல்வி ஆகியவற்றில் சீர் திருத்தம் செய்யப்படவேண்டுமென ஆலோசனை தெரிவித்துள்ளார்

இந்த ஆலோசனைகள் யாவும் மக்கள் சீனக்குடியரசைப் பின்பற்றியதாகவேயுள்ளன.

திருமதி பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் சிந்தனைகளையும் அரசாங்கம் பிரசுரித்து வெளியிடுவதோடு எங்கும் பரவச்செய்தல். இதனால் பண்டாரநாயக்காவின் கொள்கைகளின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்துகொள்வார்கள்.

■ ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைச் செயற்படுத்துவதற்கு ஒரு ஸ்தாபனத்தை உருவாக்குதல். இது மக்களுக்கு உபதேச நிலையமாக விளங்கும். பாடசாலைகள் தொழிற்சாலைகள் அரசாங்க இலாகாக்கள் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து பூரணமாகச் செயற்பட உதவி செய்யும்.

■ சிந்தனைகள், போதனைகள், கல்வி பெறுதல் உரையாற்றுதல், தொழில் புரிதல் ஆகியயாவும் பொது நலத்துக்காகவே அமைய வேண்டும். வேறுசெயல்கள் யாவும் பிற்போக்குச் சக்திகளும் இதே வழியைத்தான் இலங்கையும் பின்பற்ற முயற்சிக்கவேண்டும். பெரும்பாலும் மேல்நாட்டு முறையில்நம்பிக்கைவைத்து கடந்த 25 ஆண்டுகாலமாக நாட்டை அபிவிருத்தி செய்ய முயன்றும் பொருளாதார சுதந்திரத்திற்குக் கூட வழிகாணமுடியவில்லை என்றார். திரு இலங்கரத்தின.

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே தலைவரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழ். ஐக்கிய முன்னணியால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றை நடைமுறைப்படுத்த மக்கள் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென அவர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதைவிட இலங்கைக்கு வேறுவழியில்லை எனஅவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'பண்டாரநாயக்கா சிந்தனைகள் வெளியிட தீர்மானம்

கட்சியின் பத்திரிகையான 'த நேஷன்' என்பதில் கட்சியின் உப தலைவரான திரு. இலங்கரத்ன தான் எழுதிய ஒரு கட்டுரையில் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார். அக்கட்டுரையில் அவர் மேலும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பின்வருமாறு:-

■ திரு. பண்டாரநாயக்கா, திருமதி பண்டாரநாயக்கா ஆகிய இருவரது ளாகக் கருதப்படும். ஆசிரியர்கள் சமூகத்துக்கு நல்லவைகளையே போதிக்கவேண்டும். இதே போன்று தொழிலாளர்களும் மற்றவர்களிடமிருந்து பயின்று மக்களுக்கு பயிற்றவேண்டும். கல்வியின் பயன் பரீட்சையில் சித்தியடைவதில்லை சமூகத்துக்கு நன்மை செய்யத்தக்க சத்தியைப் பெறுதலேயாகும்.

திரு இலங்கரத்ன பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய பின்வரும் ஆலோசனைகளையும் குறிடபிட்டுள்ளார்:-

■ நாடு உணவு, தானியங்கள், மரக்கறிவகைகள், பழவகைகள் ஆகியவற்றில் சுய தேவையைப் பூர்த்தி செய்யத்தக்க வகையில் திட்டங்களை வகுக்கவேண்டும்.

■ கைத்தொழிலைச் செய்கையை மேலும் விஸ்தரித்தலுக்குத் தடைவிதித்தல்.

■ றப்பர் பொருட்கள் உற்பத்திக்கு ... களைத் ... வகையில் றப்பர் ...

பண்டாரநாயகாவின் சிந்தனைகள் எனும் நூல் 'மாஓ சிந்தனைகள்'' என்னும் புத்தக வடிவில் அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பொக்கற் புத்தக அளவிலான நூலை எல்லோரும் தம்மோடு கொண்டு செல்ல தூண்டப்படுவார்கள் எனத் தெரியவருகிறதுஇப்புத்தகத்தில் 1971-ம் ஆண்டுக்கான கலண்டரும் இருக்கும் எனக் கூறப்படுகிறது. (சி. பி. ஏ.)

## 3 புதிய சமாதான நீதிபதிகள்

யாழ்ப்பாணம். செவ்.

டாக்டர் எஸ். ஏ. அம்பலவாணர். மாணிப்பாய்ப் பட்டின சபை அங்கத்தவர் திரு. மார்க்கண்டு அகில இலங்கை சிறுபான்மைத் ...

29 வது சரத்தை சேர்க்காவிடில்

## 'அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரிக்க வேண்டும்'

ஊரதீவு. திங்கள்

'இன்றைய அரசியல் அமைப்பிலே இருக்கின்ற இருபத்தொன்பதாவது சரத்து, பிரிவுக் கவுன்ஸிலுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை ஆகியவற்றை புதிய அரசியல் அமைப்பிலே சேர்க்குமாறு ஒவ்வொரு தமிழ்ப் பிரதிநிதியும் அரசினரைக் கோரவேண்டும். அவ்வாறு அரசினர் சேர்த்து, தமிழினத்தின் தன்மானத்தைக் காக்க தவறின் அரசியல் அமைப்பு நிர்ணய சபையைத் தமிழ்ப் பிரதிநிதிகள் பகிஷ்கரிப்பதன் மூலம் தமது சாத்வீக ரீதியரன தார்மீக எதிர்ப்பை அரசினருக்குணர்த்தி தமிழரின் தனித்துவத்தைக் காக்க வேண்டும்'

இவ்வாறு ஊரதீவு இளந் தமிழர் மன்றப் பொதுச் சபை தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்துள்ளது.

## வங்கமொழி

கல்கத்தா, அக். 19

மேற்கு வங்காளத்தில் வாழும் தமிழர்கள் வங்காள மொழியைக் கற்கவேண்டும் இவ்வாறு கற்பதினால் தேசிய ஒருமைப்பாடு வலிமைப்படும் என தமிழ்நாடு சட்டசபையின் சபாநாயகர் புலவர் கோவிந்தன் அறிஞர் அண்ணா விழாவில் பேசுகையில் கூறினார்.

கல்கத்தாவில் வாழும் தமிழர்கள் எடுத்த அறிஞர் அண்ணா விழாவில் புலவர் கோவிந்தன் தொடர்ந்து பேசுகையில், வங்காள மொழி இலக்கியச் செம்மை உடையது வங்காள இலக்கியங்களைத் தமிழில் மொழி பெயர்க்கவேண்டும்என்றார்.

## கடத்தல் பிடிபட்டன

வல்வெட்டித்துறை, திங்கள்

வல்வெட்டித்துறை கடற்கரைப் பகுதியில் இன்று காலை கடத்தலுக்கு கொண்டுவரப் பட்டதென சந்தேகிக்கப்படும் சில பொருட்களை இராணுவத்தினரும்பொலிசாரும் கைப்பற்றினர் இது சம்பந்தமாக யந்திரப்படகுகளும் சுங்கப்பகுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு கடத்துவதற்கே இப் பொருட்கள் தயாராக வைக்கப்பட்டிருந்ததென சந்தேகிக்கப்படுகிறது

கைப்பற்றிய பொருட்கள் சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது

சில தினங்களுக்கு முன்னரும் பருத்தித்துறையில் கராம்பு மூடைகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டு சுங்கப்பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

## 'உயர்ந்த குறிக்கோளைச் சொல்வதே இலக்கியம்'

சுழிபுரம், திங்கள்

'அன்பின் அடித்தளத்திலிருந்து இலக்கியங்கள் தோன்றவேண்டும். அவை காலத்தால் அழியாதவையாகவிருக்கவேண்டும் கம்பராமாயணம், சிலப்பதிகாரம், மற்றும் சங்க இலக்கியங்கள் போன்றவை எத்தனை ஆயிரம் ஆண்டுகளாகவும் அழியாது இன்றும் வாழக்காரணம் அவை மனிதனை மனிதனாக வாழச்செய்து தெய்வ நிலைக்கு உயர்த்தும் வெற்றி பெற்றுள்ளமையே'

இவ்வாறு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மேல் வகுப்பு இலக்கிய மாணவ மன்றத்தில் சிறப்புரையாற்றிய பண்டிதர் ப. இராசகுரு குறிப்பிட்டார். 'இலக்கிய இன்பம்' என்னும் பொருள்பற்றி மேலும் பேசுகையில், ''இலக்கியத்தை இலக்கு இயம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இலக்குஎன்றால்குறியென்றும் குறிக்கோள்என்றும்பொருள்படும் இயல் என்றால் சொல்வது. உயர்ந்தகுறிக்கோளைப் பற்றி சொல்லுவன இலக்கி... விடக்கூடியனவாக அமைய வேண்டும். இக்கருத்தை யுட்கொண்டு தான் பாரதி 'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக்கண்டார்' என்று கூறியிருக்கின்றார்'' என திரு இராசகுரு தமது பேச்சில் மேலும் சொன்னார்.

## உதவி அமைச்சர் கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், செவ்.

நாளை மாலை இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் உதவிகல்வி அமைச்சர் திரு பி வை. துடாவே கலந்து உரையாற்றுவார். மாணவர்களுக்கு திருமதி துடாவே பரிசில்களை வழங்குவார்.

இருதய நோய்க்கு

## புகைப்பிடிப்பது ஒரு காரணம்

லண்டன், அக் 19

இருதய நோய்க்கு புகைப்பிடிப்பதுதான் மிக முக்கிய காரணமாம். பி. பி. சி. நிறுவனம்பிரிட்டிஷ் நிபுணர்களைக் கொண்டு நடத்திய பரிசோதனையிலிருந்து இது தெரிய வந்துள்ளதாம்,

இருதயநோய்க்குக் காரணம் சர்க்கரைதான் என்று பொதுவாகக் கருதப்பட்டு வந்தது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பதைக் கண்டறியும்படி டாக்டர்களை பி. பி. சி. நிறுவனம் கேட்டுக் கொண்டது. இவர்கள் நடத்திய ஆராய்ச்சியில் இருதய நோய்க்கு புகைப்பிடிப்பதுதான் முக்கிய காரணம் என்று தெரிய வந்ததாம்.

## 'சேகுவேரா' என்றுகூறி எங்களைத் தாக்குகிறார்கள்

### பீகிங் கம். பத்திரிகை கண்டனம்

கோட்டை, திங்கள்

ஜனதா விமுக்தி பெரமுனை அங்கத்தவர்களைத் ... உத்தரவையும்பெருமல் புகைப்படங்களையும் கை...

# இன்று யாழ். நகர் வரும் உதவி அமைச்சர் துடாவை

துடாவை என்பதுமாத்தறைப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தின் பெயராகும். கல்வி உதவி மந்திரி திரு. துடாவை இக்கிராமத்தில் பிறந்த காரணத்தால் இக் ...

அவர் டிஸ்றிக் கூட்டுறவுச் சங்கத்தில் காரியதரிசியாகவும் வெள்ளப்பெருக்குப் போன்ற விபத்துக்களை பொது மனிதனுடன் தோளோடு தோள் நின்று நேர்மையாக வேலைசெய்து ...

## 5 மாதத்தின்பின் காலமானார்

சுழிபுரம், திங்கள்

...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடாவை என்பதுமாத்தறைப் பிரதேசத்தில் ஒரு கிராமத்தின் பெயராகும். கல்வி உதவி மந்திரி திரு. துடாவை இக்கிராமத்தில் பிறந்த காரணத்தால் இக்கிராமத்தின் பெயர் அவருக்கு இடப்பட்டது. திரு. துடாவை மூலம் துடாவைக் கிராமம் இன்று பிரசித்தி பெற்றுள்ளது,

பொலிவான தோற்றமும் அன்பும் பண்பும்மிக்க கல்வி உதவி மந்திரி பி, வை. துடாவையிடம் காணப்படும் நல்லநோக்கம், நேர்மையான எண்ணம், நல்ல பழக்கவழக்கம், இரக்கம், தயவுதாட்சண்யம் போன்ற சிறந்த அம்சங்களே அவருடைய முன்னேற்றத்தின் இரகசியம் என்பதை நான் ஒரு தடவை அவருடன் பேசிய சிறிதுநேரத்திலேயே உணர்ந்துகொண்டேன்,

திரு. துடாவையின்தந்தை ஒரு சாதாரண தொழிலாளியே ஆரம்பக் கல்வியை கிராமப் பாடசாலையிலும் உயர்கல்வியை நகரத்துக்கல்லூரியிலும் பெற்ற இவர் பின்னர் 35 ரூபா சம்பளத்தில் ஆசிரியத் தொழிலை ஏற்றுப் பணியாற்றினர். பல காலம் தலைமை ஆசிரியராகவும் கடமையாற்றிய திரு. துடாவை முப்பது வருட ஆசிரியப்பணியைத் துறந்து நேரத்தையும் சிரமத்தையும் அரசியலுக்காகச் செலவிட்டார். ஆசிரிய சேவையிலிருந்து அவர் ஆற்றிய சேவையிலும் பார்க்கஇலங்கை கம்யூனிஸ்ட்கட்சியில் சேர்ந்து பின்னர் கிராமசபை உறுப்பினராக வந்து ஆற்றிய சேவைகள் வரலாற்றில் இடம்பெற வேண்டியவை.

இவர் லோர்ட் சோல்பரியின ஆட்சி முறைக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து போராடினூர். சுய பாஷையில் கல்வி, இலவசக் கல்வி, பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தல் போன்ற வற்றுக்காக அப்போதே அவா போராடினூர்.

மாத்தறையில் முதலாவது ஆசிரிய தொழிற்சங்கத்தைத் தொடக்கிய பெருமையும் திரு, துடாவைக்கே உரியது. லங்கா ஜாதிக குரு சங்கமய மாத்தறைக் கிளைக் காரியதரிசியாயிருந்து பின்னர் தக்ஷண லங்கா குருசங்கம் என்ற பெயரில் இன்னுெரு பலமான ஆசிரிய சங்கத்தைத் தொடக்கினூர்.

ஆசிரியர்களுடையவும், மாணவர்களுடையவும் தற்போதைய நிலைமையை முன்னேற்றுவதற்கு அவர் எப்போதும் முன்வந்தார். அவர் டிஸ்றிக் கூட்டுறவுச் சங்கத்தில் காரியதரிசியாகவும் வெள்ளப்பெருக்குப் போன்ற விபத்துக்களை பொதுமனிதனுடன் தோளோடு தோள் நின்று நேர்மையாக வேலைசெய்து எல்லோருடைய அன்புக்கும் பாத்திரமானூர். 1963-ம் ஆண்டில் பொதுமனிதனுக்காக அவர் இரண்டுவாரம் சிறை அனுபவித்தார்.

தொழிற்சங்கங்கள் அரசியல், சமூக, சேவை முதலிய வைகளைப்போல சமயத் தொண்டுகளிலும் திரு துடாவை முன்னின்றூர். மாத்தறை பௌத்த வாலிப சங்கத்தின் போஷகராக அவர் இப்பொழுதும் இருக்கிறூர். அரசியல் போர்க்களத்தில் இவர் செய்த போராட்டம் அதிசயிக்கத்தக்கது. கையில் தம்பிடிகூட இல்லாமல் தாம் பெற்ற சாதனையை காசால் செய்த மாலைகளைப் போட்டு பொது சனங்கள் தம்மை வரவேற்றது பற்றி திரு. துடாவை என்னிடம் அப்போது விபரித்தார்.

1960-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மாத்தறையில் பொட்டியிட்டுத் தோல்வியடைந்தார். 1965ம் ஆண்டு 720 வாக்குகளால் வெற்றி பெற்றூர். 1970-ல் 720க்குப் பதிலாக 6720 வாக்குகள் அதிகப்படியாகப் பெற்று வெற்றிபெற்றூர்.

பெருமையுடன் சொல்லுகிறேன், நான் ஒருபோதும் தேர்தலுக்காக ஒரு சதமேனும் செலவுசெய்யவில்லை; எனக்கு செலவுசெய்ய காசு இருக்கவுமில்லை எனக்காக செலவு செய்தது பொது ஜனங்களே என அவர் சொன்னூர்.

— எஸ். விஜயானந்தன்

## நல்லூரில் இவை தேவை

கொழும்புத்துறை, திங்கள்

நல்லூர்ப் பகுதிக்கு ஓர் உபதபால் நிலையமும், விற்பனவு நிலையமும், பால்சபை ஒன்றும் அமைத் துதரும்படி நல்லூரிலுள்ள சமூகஸ்தாபனங்கள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

......

## தபால் பெட்டி பழுது

கொழும்புத்துறை, திங்கள்

நல்லூர்ச் சந்தியிலுள்ள தபால்பெட்டி சென்ற சில வாரமாகப் பழுதடைந்துள்ளது, இதனுல் தபால்பெட்டிக்குள்ளேயிருக்கும் தபால்களை விஷமிகள் இரவில் கையாடுவதாகக் கூறப்படுகிறது.

## 5 மாதத்தின்பின் காலமானூர்

சுழிபுரம், திங்கள்

தமது ஆதரவாளர் கடந்த பொதுத் தேர்தலில்தோல்வியுற்ற செய்திகேட்டு அதிர்ச்சிக்குள்ளாகிப் படுக்கையில் கிடந்தவர் மீண்டும் எழுந்திருக்காமலே சுமார் ஐந்து மாதங்களின்பின் நேற்று மரணமானூர். சுழிபுரம் தபால் நிலையத்தில் கடமையாற்றும் அ. வீரசிங்கம் என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். பல பொது இயக்கங்களிலும் முக்கிய பதவிகளை வகித்த இவர் ஒரு பிரபல சமூக சேவையாளராவார் இவரது ஈமக்கிரியைகளில் ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

— —

## செனட்டர் ஜெயசூரியா இன்று வருகிறூர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

செனட்டர் திரு. ஏ. பி. ஜெயசூரியாஇன்றுயாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்கிறூர், சினிமாப்பட உற்பத்தியாளரான திரு. ரூபின் தம்புவின் விருந்தினராக இங்கு தங்கும் செனட்டர் ஜெயசூரியா நயினுதீவு மற்றும் முக்கிய இடங்களுக்குச் செல்வார்.

— —

## சங்கானையில் வரவேற்பு

தாவடி, செவ்வாய்

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய பெற்றூர் ஆசிரிய சங்கம், பழைய மாணவர் சங்கம் சார்பில் வருகிற புதன்கிழமை உதவிக்கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவைக்கு வித்தியாலய மண்டபத்தில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது. புதிய கட்டிடத்திற்கான அத்திபாரக்கல்லை உதவி அமைச்சர் அன்று நாட்டுவார்.

— —

## சுதந்திரக் கட்சி நவாலிக் கிளை

நவாலி திங்கள்

கடந்தசெவ்வாய்க்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நவாலிக் கிளையின் பொதுக் கூட்டம் திரு. சி சந்திரலிங்கம் தலைமையில் கட்சிக்காரியாலய முன்றலில் நடைபெற்றது. மாணிப்பாய்பட்டினசபை அங்கத்தவர் திரு. எஸ். மார்க்கண்டு, சுன்னுகம் பட்டினசபை உபதலைவர் திரு. எம். நடராசா செல்வி தேவமலர் நல்லதம்பி ஆகியோர் உரையாற்றினர்,

...யிலைச் செய்கையை மேலும் விஸ்தரித்தலுக்குத் தடைவிதித்தல்.

■ றப்பர் பொருட்கள் உற்பத்திக்கு மூலப் பொருள்களைத் தடையின்றி அளிக்கத்தக்க வகையில் றப்பர் உற்பத்தியை விஸ்தரித்தல்.

■ இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களினுல் பிளாஸ்ரிக் பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு ஊக்கமளியாமை.

■ உற்பத்தியிலும் நிர்வாகத்திலும் தொழிலாளர்கள் பங்கு கொள்வதோடு நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் முழுமையாகப் பங்கு கொள்ளுதல்.

■ பெண்களுக்கும் ஆண்களுக்கும் வெவ்வேறுன தரமுடைய ஜவுளிகளை உற்பத்தி செய்தல். வெள்ளைப் பருத்தி ஆடைகளும், மிக மெல்லிய பப்பிறிக் ஆடைகளும் நேரத்தை விரையமாக்குவதோடு பணம், சக்தி ஆகியவற்றை விரயமாக்குவதாக எனக்குப் படுவதினுல் நிறமுடையதாகவும் அழுத்தமாகவும் ஜவுளிகளை உற்பத்தி செய்வதற்கே முதலிடம் கொடுப்பேன். வெள்ளை நிறத் துணிகள் அடிக்கடி கழுவப்பட வேண்டியதனுல் சவர்க்காரம், கஞ்சி, மினுக்குதல் தேவையாக இருக்கிறது. இதனுல் பணம் வீணுவது மட்டுமல்ல, துணிக்குத் தீமையாவதோடு அணிவதற்குப் பாரமாகவும் இருக்கும். இதன் காரணமாக மேலும்மேலும் இவ்வித ஜவுளிகளை இறக்குமதி செய்வது அந்நியச் செலாவணியை வீணுக்குவதாகும்.

■ ஆண் பெண் இருபாலாரும் ஒரே மாதிரியான தொழில் சீருடை

■ தனியார் போக்குவரத்துக்கு ஊக்கமளிக்காமல் பொதுப் போக்குவரத்துச் சேவைக்கு ஊக்கமளித்தல்.

■ வருமானத்திற்கு வரயறை (வரம்பு) செய்தல்.

அக்டோபர் மாதம் 26-ந் திகதிநிதிஅமைச்சரின் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதும் அரசாங்க அங்கத்தவர்கள் எவ்வளவு பேர் திரு இலங்கரத்தினுவின் இவ்வித சிந்தனையினுல் கவரப்படுகிறூர்கள் என்பது தெரியவரும். இன்றைய நாட்டின் நிதிநிலைமையில் நிதி அமைச்சர் உட்பட அரசாங்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான அங்கத்தவர்கள் இவ்விதசிந்தனைக்கு மாற்றப்படுவார்கள் என சில அவதானிகள் கருதுகின்றனர்.

சீனு போன்ற ஒரு நாடுதான் ஊக்கத்தினுலேயே அபிவிருத்தியடைய முடி...

யாழ்ப்பாணம், செவ்.

டாக்டர் எஸ். ஏ. அம்பலவாணர். மானிப்பாய்ப் பட்டின சபை அங்கத்தவர் திரு. மார்க்கண்டு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உப தலைவர் திரு. கே. துரைசிங்கம் ஆகியோர் யாழ். நீதிபதி திரு, ஜே. எவ் எவ் டயஸ் முன்னிலையில் சமாதான நீதிபதிகளாகச் நேற்றுச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்கள். (கு. வி. ம.)

— —

## பதவி உயர்வு

மாவிட்டபுரம், திங்கள்

சுன்னுகம் பொலிஸ் கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிய திரு. ஈ. வீரக்கொடி, சார்ஜன்டாக பதவி உயர்வு பெற்று இதே பொலிஸ்நிலயத்துக்கு மீண்டும் வந்துள்ளார். இவர் கொழும்பு பொலிஸ் பயிற்சிப் பாடசாலையில் மூன்று மாதகாலமாக சார்ஜன்ட் பயிற்சி பெற்ளூர்,

......

## தையல் பாடசாலை

உரும்பராய், திங்கள்

வட்டுக்கோட்டை சிவன் கோவிலடியில் இளைஞர் நல்லெண்ண இயக்கத்தினுல் தையல் பாடசாலையொன்று திறக்கப்பட்டுள்ளது இயக்கச் செயலாளர் திரு. எச். ஜே கனகசபை இதனைத் திறந்து வைத்தார்.

செல்வி அஞ்சலிதேவி கனகசபை இப்பாடசாலை ஆசிரியையாகச் சேவையாற்றுகிறூர்'

......

## யாழ்ப்பாண ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### முன்னேறத் துடிப்பவர்கள்

புதிதாக இப்போதுதான் யாழ். அரசாங்க அதிபராகப்பதவி ஏற்றிருப்பதால் இளைஞரான திரு. விமலிடம் இப்படியொரு கேள்வியையும் கேட்டேன்.

யாழ்ப்பாணத்தைப் பற்றியும், யாழ் மக்களைப் பற்றியும் என்னநினைக்கிறீர்கள்?'' என்றேன்.

அவர் சொன்னூர்; ''யாழ்ப்பாணத்தை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. முன்னேறவேண்டுமென்ற எண்ணம் படைத்தவர்களாக இங்குள்ளவர்கள் இருக்கிறூர்கள் என்பதை சில தினங்களில்தெரிந்துகொண்டேன். சமாதானத்தை விரும்புபவர்களாகவும் இருக்கிறூர்கள் பொருளாதாரத்துறையில் முன்னேற்றமடையவும் அரசாங்கத்தின் கொள்கைகளை அமுல்படுத்தவும் நிச்சயம் ஆதரவு அளிப்பார்கள் என்பதில் எனக்கு எவ்விதசந்தேகமுமில்லை.

...கையில், ''இலக்கியத்தை இலக்கு இயம் எனப் பிரித்துப் பொருள் கொள்ளலாம். இலக்குஎன்றூல்குறியென்றும் குறிக்கோள்என்றும்பொருள் படும் இயல் என்றூல் சொல்வது. உயர்ந்தகுறிக்கோளைப் பற்றி சொல்லுவன இலக்கியங்கள். இழிந்த நிலையைச் சொல்வன இலக்கியம் ஆகா இலக்கியங்கள் மனிதனை வையத்து வாழ்வாங்குவாழ வழிகாட்டி வானுறையும் தெய்வநிலைக்கு உயர்த்தி...

## விஞ்ஞானத்தின் முக்கியத்துவம்

பருத்தித்துறை திங்கள்

'வியாபித்துவரும் சமுதாயத் தேவைகளை விஞ்ஞான மூலமே பூர்த்திசெய்ய முடியும், எனவே விஞ்ஞானக் கல்வி ஏட்டளவில் மட்டும் நின்றுவிடாது நாட்டுக்குப் பயன்படவும் வேண்டும்'

இவ்வாறு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உரைநிகழ்த்திய திரு டி வேலும்மயிலும் கூறினூர்.

## ...எங்களைத் தாக்குகிறூர்கள்

### பீகிங் கம். பத்திரிகை கண்டனம்

கோட்டை, திங்கள்

ஜனதா விமுக்தி பெரமுனை அங்கத்தவர்களைக் கைது செய்வதாகக் கூறிக்கொண்டு பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்களைப் பொலிசார் கைது செய்து துன்புறுத்துவதாக பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சி வார இதழான 'கம்கறுவா' எனும் சிங்கள இதழ் பொலிசார் மீது கண்டனம் தெரிவித்துள்ளது.

மிகப் பிரபலம் வாய்ந்த பீக்கிங் கம்யூனிஸ் கட்சிப் பிரமுகர்களை ஜனதா விமுக்திப் பெரமுனையைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு பல முறைகளில் பொலிசார் அவர்களைத் தாக்கியுள்ளனர் என்று அப்பத்திரிகை கூறுகின்றது.

மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது! சட்டத்திற்கும் புறம்பான முறையில் மஜிஸ்டிரேட்டின் எவ்வித உத்தரவையும்பெருமல் புகைப்படங்களையும் கைவிரல் அடையாளங்களையும் பொலிஸார் எடுக்கின்றனர் முதல் முதலில் செகுவேரா இயக்கத்தை கண்டித்தவர்கள் நாங்கள்தான். அரசியல் வகுப்புக்களுக்குச் சமூகமளிக்கும் பொது மக்களை கைது செய்வதற்குப் பொலிசாருக்கு எவ்வித உரிமையும் இல்லை. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்விட்ட அறிக்கையில்முரண்பாடுகள் உண்டு அதில் சொல்லப்பட்டதுபோலயாரும் கைது செய்யப்படவில்லை.

சீனுவின் தேசிய தின விழாவை ஒட்டி யாழ் இலங்கை சீன நட்புறவுச் சங்கத்தால் தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளை ஒட்டியவர்களைப் பொலிசார் கைது செய்து பாதுகாவலில் வைத்துள்ளனர்.

## "தேவைக்கு அதிகமாக 1000 தமிழ் ஆசிரியர்கள் இருப்பதாகக் கூறுவது தவறு'

### கல்வி அமைச்சருக்கு கா. பொ. கடிதம்

வேலணை, திங்கள்

கொழும்புப்பகுதியில் ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் இருப்பார்கள் என்று கூறமுடியாது. நிலைமை இவ்வாறிருக்க தேவைக்கு அதிகமாக ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் இருப்பதாக தாங்கள் கூறுவதுவிந்தையாகஇருக்கிறது.

தமிழ்ப் பட்டதாரிகளையும் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்களையும் நியமிக்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள இச்சமயத்தில் இத்தகைய தொருபொருத்தமற்றசெய்தியை வெளியிடுவது தமிழ் மக்களிடையே வெறுப்பையும் எதிர்ப்பையும் வளர்க்கும் என்பதைசுட்டிக்காட்ட வேண்டியதில்லை. தங்கள் அமைச்சின் போக்கு தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் உண்டாக்கிறது.

மேற்கண்டவாறு கல்வி அமைச்சர் பதியுதீன் மகமூத்துக்கு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள மேலதிக தமிழாசிரியர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நியமனங்கள் என்னும் தலைப்பில் பத்திரிகையில் வெளிவந்த செய்தி தமிழ் மக்களுக்கு வேதனையையும் வெறுப்பையும் உண்டாக்குகிறது.

கொழும்பு பிராந்தியத்தில் தேவைக்கு அதிகமாக ஆயிரம்தமிழ் ஆசிரியர்கள் இருப்பதாகவும் இவர்களைவடபகுதிக்குஅனுப்ப நீங்கள் திட்டமிட்டிருப்பதாகவும் தமிழ் காங்கிரஸ் எம். பி. க்கள் மூவருக்குநீங்கள் கூறியதாக வெளிவந்த செய்தி இன்று வரை மறுக்கப்படவில்லை. ஆதலால் இதனை உண்மையெனக் கொள்ளவேண்டியிருக்கிறது.

முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழாசிரியர்கள் இடத்துக்கு பட்டதாரி முஸ்லிம்களை நியமிக்க இருப்பதாலேயே தமிழாசிரியர்கள் மேலதிகமாகவரும் என்றுஅமைச்சர் தெரிவித்ததாக பத்திரிகைச்செய்தி கூறுகிறது. முஸ்லிம் பாடசாலைகளில் கற்பிக்கும்தமிழ் ஆசிரியர்களை மாற்றிவிட்டு அவ்விடங்களுக்கு முஸ்லிம் ஆசிரியர்களை நியமிக்கமுயன்ருல், தமிழ்ப்பாடசாலைகளில் உள்ள முஸ்லிம்ஆசிரியர்களையும் தமிழ்-முஸ்லிம் பாடசாலைகளில் உரிய விகிதத்துக்கு மேலுள்ளமுஸ்லிம் ஆசிரியர்களையும் மாற்றிவிட்டு அவ்விடங்களுக்கு தமிழ்ஆசிரியர்களை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்' என திரு. இரத்தினம் தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

நாட்டில் சந்தேகத்தை உண்டாக்கும் இந்தப் பிரச்னையில் உண்மைநிலையை அறிவதற்கு வாய்ப்பாக பின்வரும் விடயங்களை அறிவிக்கவும்,

கொழும்பில் கற்பிக்கும் தமிழாசிரியர் தொகை, இவர்களுள் மேலதிகமானோரின் தொகை, ஒவ்வொரு கல்வி மாவட்டங்களிலும் இந்த ஆண்டு முடிவில் ஓய்வு பெறும் தமிழாசிரியர் ஒவ்வொரு கல்வி மாவட்டப் பாடசாலைகளிலும் 1-10-70ல் தமிழ் ஆசிரியர்களுக்குரிய வெற்றிடங்கள், ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளிலும், தமிழ் முஸ்லிம் பாடசாலைகளிலும், முஸ்லிம் மாணவர் விகிதத்துக்கு மேலுள்ள முஸ்லிம் ஆசிரியர் தொகை என்பன பற்றி தமிழர் மத்தியில் ஏற்பட்டுள்ள சந்தேகத்தை நீக்கி உண்மை நிலையைத் தெரிந்துகொள்வதற்கு அறியத்தரவும்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org